ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

புகழேந்திப்புலவர்களியற்றிய

# பெரிய எழுத்து

# வித்துவான் குறம்.



ம. திருவேங்கட முதலியார்

அவர்களது,

வாணி விலாசம் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

இதன் விலை அணா - 6.

1920.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# வித்துவான் குறம்.



வெண்பா.

சீருலவுந்தென்பாண்டிச் செல்விஅல்லிநல்லாள்சீர்
பேருலவுமென்குறமாய்ப் பேசுதற்கிங்—கேகுலவும்
விரிபுனலும்வெண்மதியும் வேணியரன்றந்த
கரிமுகவன்செஞ்சரணே காப்பு.

விநாயகர் துதி.

வெண்செந்துறை.

ஐந்துகரத்தோனே அருள்சடையாள்புத்திரனே
அறுமுகர்க்குமூத்தவரே யானைமுகப்பிள்ளையரே
தொப்பைக்கணபதியே தொந்திவிநாயகரே
யானைவயிற்றோனே பழமேந்துங்கையோனே
ஆலடியிற்பிள்ளையரே அரசடியில்விக்கினரே
வேலடியிற்பிள்ளையாரே விக்கினவிநாயகரே
வெட்பாலைக்கீழிருக்கும் சப்பாணிப்பிள்ளையரே
சப்பாணிப்பிள்ளையரே பொற்பாதம்நான்மறவேன்
மூலமுதலே நீர் முன்னடக்கவேண்டுமையா
முன்னடக்கும்பிள்ளையர்க்கு கண்ணடக்கம்பொன்னாலே
கண்ணடக்கம்பொன்னாலே காற்சிலம்புமுத்தாலே
முத்தாலேதண்டைகொஞ்ச முன்நில்லுமென்கவிக்கு
பாடவருள்புரியும் பரமருடபுத்திரரே
எழுதவருள்புரியும் ஈஸ்வரியாள்தான்மகனே
வித்வான்குறம்பாட விக்கினரேகாத்தருளும்
அல்லிகுறம்பாட ஐங்கரனேமுன்னடவாய்

சரஸ்வதி துதி.

தாயேசரஸ்வதியே சதுர்முகனார்தேவியரே
நாவிசரஸ்வதியே நான்முகனார்தேவியரே

நான்முகனார்தன்னுடைய நாவிலிருப்பவளே
அயனுடையநாவுநனி லமர்ந்திருக்கும்வல்லவியே
இந்தக்கதையுரைக்க இனிசருத்தைந்தாருமம்மா
வித்வான்குறமுறைக்க விளங்குமருள்புரியும்
அல்லிகுறமுரைக்க அருள்புரியுமிவ்வரியே
தப்புகளுண்டாயின் தாயேமனைப்பொறுத்து
குற்றமிருந்தாலும் கூட்டிவைக்கவேண்டுமம்மா
உந்தனருளாலே உளருகிறேனிக்கதையை
எந்திங்கெனக்கு வரமருளவேண்டுமம்மா

## கதையின் வரலாறு.

பட்டணமாம்பட்டணமாம் மதுராபுரிபட்டணமாம்
பட்டணத்தையாளுகிற பாண்டியராஜாக்கள்
அரியதவமிருந்து அல்லியரைப்பெற்றெடுத்தார்
தவமாதவமிருந்து கையலரைப்பெற்றெடுத்தார்
பூவிலுதித்தெழுந்தாள் பொற்கொடியாளல்லியரும்
மலரிலுதித்தெழுந்தாள் மாதரசியல்லியம்மாள்
நீர்முகனைச்சங்கரித்து நீலிபட்டமாளுகையில்
பனிரண்டுதன்வயதில் பாருலகமாளுகையில்
வனவேட்டைபோம்போது மாதரசியல்லியவள்
கண்டுமையலானர் காளையருச்சுனரும்
அல்லியரைமாலையிட ஆண்டிவடிவமானர்
வேதியரைப்போல்வந்து மென்கிளியைமாலையிட்டார்
புத்திரனுண்டானபின்பு போய்சேர்ந்தாரத்திபுரம்
அருச்சுனர்போனபின்பு அல்லிப்பெருமாளும்
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
ஐம்பதறுகாதம் அரசாளும்நாளையிலே
விளங்கியசிர்மாதவத்து மின்னொளியாள்நாயகியும்
பூசைபண்ணும்வேளையிலே புருஷனும்வந்தானென்று
தவம்பண்ணும்வேளையிலே தனஞ்செயனும்வந்தானென்
ஆகாக்கணவனென்று அறையவைத்தாள்சின்னத்திலே
ஒவ்வாக்கணவனென்று ஊதிவைத்தாள்சின்னத்திலே
ஊதிவைத்தநாள்முதலா யுத்தமனர்போறதில்லை
மின்னொளியாள்வாசலுக்கு விறையனர்வாரதில்லை
அர்ச்சுனன்வாரதினல் அரிவைசிறையானள்

தனஞ்சயன்வராததினால் தையல்சிறையானாள்
ஐந்துவருடமா யருஞ்சிறையில்தானிருந்தாள்
எழுவருடமா யினியசிறையிருந்தாள்
சிறையிருந்தவண்மைகளைத் தேன்மொழியாள்தானறிந்
தோருவடிவழகி துரௌபதையுந்தானறிந்து [து
அர்ச்சுனனார்தேவிமார்க ளனைவரையுந்தானழைத்து
சிறுசோறமுதுசெய்து தேன்மொழிமாருண்டபின்பு
அவரவர்கள்மாளிகைக்கும் அனைவோரும்போனபின்பு
அல்லியும்துரோபதையும் அமர்ந்திருந்துமண்டபத்தி
தோருவடிவழகி துரோபதைநாயகியும் [ல்
அப்போதுஎன்னசொல்வாள் அல்லிப்பெருமாட்கு
மேகம்பயின்றெடுத்த மின்னொளிநாயகிக்கும்
ஆணலழகுமன்னன் அருச்சுனராசனுக்கும்
இருவருக்கும்தானடந்த ஏடாகூடமத்தனையும்
இடைச்சிசுபத்திரைக்கு இரண்டுமுறையானதுவும்
அத்தனையும்தானுரைத்து அல்லிமலர்நாயகிக்கு
இருவருமொன்றாகி ஏகாந்தம்தான்பேசி
ஆரணங்கிருவர்களும் ஆலோசனைசெய்து
அருச்சுனராஜாவை அங்கேவரவழைத்து
அல்லிப்பெருமாளும் அரசாளும்நாயகியும்
நெருப்பிற்பிறந்ததொருநேரிழையாள்துரௌபதையும்
கொற்றவனாருச்சுனரைக் குறவேடந்தான்போட்டு
மன்னவனாருச்சுனரைமாதுகுறத்தியாக்கி
மின்னொளியாள்வாசலுக்கு விஜயரைப்போகவிட்டார்
மங்கைநல்லாள்வாசலுக்கு மன்னவரைப்போகவிட்டார்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்மாளிகைக்கு
காண்டீபராருச்சுனரும் கட்டழகர்போய்சேர்ந்து
கைபார்த்துமின்னொளிக்கு கனத்தகுறியுரைத்து
விஜயன்குறியை மெல்லியர்க்குத்தானுரைத்து
குறத்தியுருவம்விட்டுக் கொற்றவனாருச்சுனரும்
மாதருருமாறி மன்னவனாருச்சுனரும்
சந்தோஷமாகித் தனஞ்சயனாரப்போது
கொம்பனையாள்மின்னொளியைகூடிமிகவாழ்ந்திருந்தார்
அங்கேசிலகாலம் ஆலித்துவாழ்ந்திருந்தார்
இப்படியாக இவர்வாழும்நாளையிலே
அப்போதுமின்னொளியும் அரிவைகர்ப்பந்தானாள்

## அருச்சுனன் மின்னொளியாளுக்கு சீமந்தஞ்செய்ய நினைத்தது.

அன்றுமுதலாக அருச்சுனனார் அங்கிருந்தார்
அன்னபறுநி யருந்தாளே நாயகியும்
கச்சாயந்தின்டாளே கன்னியிளங்கொடியாள்
பண்டம்பலகாரம் பாராளே கண்ணாலே
கண்டகனிவகைகள் கருத்தில் நினையாளே
உப்பஞ்சிவேண்டாள் உரியில்தயிர்வேண்டாள்
காளாஞ்சிவேண்டாள் கச்சாயந்தான்வேண்டாள்
விஜயன்முகம்பார்த்தால் வேம்பாய்க்கசந்திடுவாள்
காளைமுகம்பார்த்தால் கடுவன்போற்சீறிடுவாள்
பார்த்தன்முகம்பார்த்தால் பாரில்விழுந்திடுவாள்
இப்படிமின்னொளியா ளிருக்கும்விதமனைத்தும்
தப்பிதங்களில்லாத தாதியருந்தானறிந்து
அருச்சுனனார்விற்றிருக்கும் அரண்மனையி லுட்புகுந்து
தருமர்தம்பியருச்சுனரைத் தான்வணங்கிதெண்டனிட்டு
தெண்டனிட்டதாதி திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
தருமர்தம்பியருச்சுனனார் தார்வேந்தன்தான்பார்த்து
முத்தானமின்னொளிக்கு மூன்றுதிங்களாச்சுது
பொல்லாமசக்கை பொருந்திற்றுமின்னொளிக்கு
ஆகாமசக்கை அடித்ததுநாயகிக்கு
மின்னொளியாள்நாயகிக்கு மேன்மையுள்ளதாதியரே
என்னவகையாக இங்குவந்தாய்சொல்லுமென்றார்
வெப்பதுதிங்கி விழவெல்லாம்நெல்வாசி
இப்பாரையாள இசைவானரத்தினங்காண்
கற்புடையமின்னொளியாள் கன்னிகுளியாசி
அன்னநடைமின்னொளிக்கு ஐந்துதிங்களாச்சுதுகாண்
இன்னமுஞ்சும்மா யிருப்பதுநீதியல்ல
மன்னவரேயுங்கள் வகையுள்ளார்தங்களுக்கு
சீமந்தவோலை யெழுதுங்காண்சீமானே
கலியாணவோலை எழுதுங்காண்கட்டழகா
என்றுமவளுரைத்தாள் ஏலக்கருங்குழலும்
காண்டாவனமெரித்த காளையவள்கேட்டு

சீமந்தகல்யாணஞ் செய்யவேவேண்டுமென்று
படுத்தபடுக்கைவிட்டு பஞ்சணைமெத்தைவிட்டு
வாள்விழியன்கூந்தலிலே மல்லிகைப்பூநின்றுதிரும்
கொற்றம்பூவீரியனுர் குடுமையிலேபூவுதறி
கொம்பேருடையானும் கோதிமயிர்முடித்து
முத்துமிதியடியைத் தொட்டுமிகநடந்தார்
பவளமிழியடியைப் பதிந்துமிகநடந்தார்
முத்தால்கடகக்கை முன்னேக்கிதானடந்தார்
கிளிபவளச்செய்வாயன் கெங்கைக்கரையில்வந்து
முல்லையிதழொடித்து முத்தானபல்விளக்கி
ஆலம்விழுதொடித்து அழகியசீர்பல்விளக்கி
பாளைகொண்டுபல்விளக்கி ஓலைகொண்டுநாவழித்து
தீர்த்தநீரள்ளித் திருவாயுஞ்சுத்திசெய்து
வாசநீரள்ளி மதிமுகஞ்சுத்திசெய்து
ஆடையுங்கச்சும் அவிழ்த்துக்கரையில்வைத்து
பொய்கைமுழுகி புனற்கங்கைநீராடி
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்துதுகில்களைந்து நாகத்துளிர்பட்டுடுத்தி
சிவசிவாவென்று திருநீற்றுக்காம்பணிந்து
வில்வமெடுத்து விநாயகரைப்பூசைசெய்து
சிவந்தமலரெடுத்துச் சிவனுரைப்பூசைசெய்து
பண்ணைமலரெடுத்துப் பகவானைப்பூசைசெய்து
தும்பமலரெடுத்துச் சூரியனைப்பூசைசெய்து
வேணுமென்றதேங்கா யுடைந்தார்விநாயகர்க்கு
பழவகையத்தனையும் பலவகையாய்த்தான்பரப்பி
முன்னூறுதேங்காய் முடியோடேசூறையிட்டார்
ஐந்நூறுதேங்கா யடியோடேசூரையிட்டார்
சொக்கர்மீனுக்ஷியையுந் தெரிசித்துப்பூசைபண்ணி
மாயன்பெருமாளை மனதிலேதானினைந்து
சுற்றிவந்தமன்னவரும் செவிதனிலேபூவணிந்து
இந்திரரைக்கைதொழுது எழுந்திருந்தாரருச்சுனரும்
ஆடையுங்கச்சும் அணிந்தவாணழகன்
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்மாளிவந்து
பஞ்சணைமெத்தையின்மேல் பார்த்திபன்வந்திருந்து

## அருச்சுனன் ஸ்ரீமந்தஓலையெழுதியது.

ஆறுலவுழகுமன்னன் அருச்சுனராஜாவும்
இருந்து நினைத்தானே எழுகோடியோசனையும்
உற்று நினைத்தானே ஒருகோடியோசனையும்
ஆலோசனைபுரிந்து ஆனந்தவாழ்மார்பன்
நித்தகலிபாண்டியர்க்கு திருமுகமெழுதவென்று
சாதிப்பனையோலை சாய்த்துத்தலைவாரி
தாளிப்பனையோலை சாய்த்துத்தலைவாரி
ஈர்க்குபிளந்து இருபுறமுஞ்சொப்பனிட்டு
காம்புநறுக்கிக் கட்டழகரொப்பமிட்ட
செம்பொனெழுத்தாணி தேர்விஜையன்கைபிடித்து
கணபதியைமுன்னெழுதிக் காப்பிட்டுக்கொண்டாரே
சோலைமலருடைய சொக்கரையுந்தானினைந்து
அங்கயற்கண்ணி அம்மனையுந்தானினைந்து
காசாம்புமேனியனார் கண்ணனையுந்தானினைந்து
தம்பிபுலந்திரர்க்குச் சகலபாக்கியமுண்டாக
தருமர்பெருந்தேவி நல்லாள் தையல்துரௌபதைக்கும்
அனலிற்பிறந்ததொரு அபிஷேகப்பத்தினியாள்
நாலெழுந்துசங்கதிகள் நாயகியாள்தானறிய
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்நாயகிக்கு
அன்னநடைமாதுக்கு ஐந்துதிங்களாச்சுதுகாண்
ஸ்ரீமந்தகல்யாணம் செய்யவேணுமென்று
ஓலைகண்டநாழிகைக்கு வரவேண்டும்உத்தமியே
என்றுமேவாள்விஜையன் எழுதிமுடிந்தபின்பு
மற்றுமொருபத்தியிலே வாள்விஜையன்பார்த்தெழுதி
பூவிலவதரித்த பொன்மதுரையல்லியர்க்கு
மலரிற்பிறந்ததொருவாழ்மதுரையல்லியற்கு
ஆயிரம்பாண்டியர்கள் அரியதுரைமகட்கு
புலந்திரரைப்பெற்றெடுத்த பொற்கொடியாளல்லியர்க்கு
கொச்சிதுரைச்சியர்க்குக் கும்பிட்டேனடியேன்
வண்ணத்துரைச்சியர்க்கு வணங்கினேனடியேன் [ன்
தென்மதுரையல்லியர்க்குத் தெண்டனிட்டேனடியே
வடமதுரையல்லியரை வணங்கினேனடியேன்
கும்பிட்டேனென்றுசொல்லி குற்றங்கள்வையாதே
வணங்கினேனென்றுசொல்லி வருத்தங்கள்வையாதே
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்நாயகிக்கு

அன்னநடைமின்னெளிக்கு ஐந்துதிங்களாச்சுதிப்போ
ஸ்ரீமந்தகல்யாணஞ் செய்யவேவேணுமிப்போ
மைந்தரும் நீயும் வரவேண்டும் அத்திபுரம்
புத்திரரும் நீயும் வரவேண்டும்பொற்கொடியே
வாராமற்போனாலே மதுரைவிட்டுஒட்டிவைப்பேன்
அண்டிப்பிழைக்கவிடேன் அரசுநிலையாளவிடேன்
ஒண்டிப்பிழைக்கவிடேன் ஊரிலிருக்கவிடேன்
கோட்டையிலேகண்டாலே கொல்லத்துணிந்திடுவேன்
வேட்டையிலேகண்டாலே வெட்டத்துணிந்திடுவேன்
எமலோகம்போனாலும் இட்டுவந்துசங்கரிப்பேன்
ஆகாசம்போனாலும் அல்லியுனைச்சங்கரிப்பேன்
பாதாளம்போனாலும் பேதிப்பேனருச்சுனனான்
சொக்கரிடஞ்சென்று சொல்லியிருந்தாலும்
சொக்கரையும்உந்தனையும் சோடாகவெட்டிடுவேன்
அம்மனருகில் நீ அண்டியிருந்தாலும்
அம்மனையும்உந்தனையும் அங்ஙனவேவெட்டுவேன்
மாயனிடம்போய் நீ மறைவாயிருந்தாலும்
மாயனையும்உந்தனையும் மனமகிழச்சங்கரிப்பேன்
அருச்சுனனார்தன்சேதி யறிந்துமிருப்பாய் நீ
விஜயனார்தன்சேதி யறிந்துமிருப்பாய் நீ
ஆக்கினைக்குநான்பயந்து அஞ்சியெழுதினன்காண்
உன்செங்கோலுக்குநான்பயந்து தெண்டனிட்டெழுதி
[விட்டேன்
வரவேணும்அல்லியென்றுவாள்விஜையன்தானெழுதி
மற்றுமொருபத்தியிலே வன்னனெழுதுகின்றான்
சோரவளநங்கை சுபத்திரைநாயகியே
மாயனுடற்பிறப்பே பலராமர்தங்கையரே
ஆயனுடற்பிறப்பே அரிவைசுபத்திரையே
எங்கள்குலக்கொழுந்தே எனக்கிசைந்தகண்மணியே
அன்னநடைமின்னெளிக்கு ஐந்துதிங்களாச்சுதிப்போ
ஸ்ரீமத்தகல்யாணஞ் செய்யவேண்டுமிப்போ
மாதுதுரோபதையே வரவேண்டு நீயுமிப்போ
வாராமல் நீயிருந்தால் மனவருத்தமாகிவிடும்
மற்றுமொருபக்கத்திலே மன்னரெழுதுகிறார்
நாகமடந்தை நறுநுதலாள் நாயகியே
சேஷன்பயின்றெடுத்த சித்திரவனக்குயிலே

நாகப்பயின்றெறிக்க நறுநுதலோநந்நினைமே
அன்னநடைமின்னொளிக்கு ஐந்துதிங்களாச்சுதிப்போ
ஸ்ரீமந்தகல்யாணஞ்செய்யவேணுமிப்போ
நாகமடந்தை நறுநுதலேநீவருக
வாராமல்நீயிருந்தால் வருந்தங்கள்வந்துவிடும்
மற்றுமொருபக்கத்திலே மன்னனெழுதுகிறான்
ஐயன்மகளாரோ அழகுள்ளகண்மணியே
வேதியனார்தன்றவத்தில் விளங்கவுதித்தவளே
பொற்கலசமாதுகன்னி போகவதிநாயகமே
அன்னநடைமின்னொளிக்கு ஐந்துதிங்களாச்சுதிப்போ
ஸ்ரீமந்தகல்யாணம் செய்யவேணுமிப்போ
வனமாம்பெருங்குயிலே வரவேண்டும்நீயுமிப்போ
மற்றுமொருபக்கத்திலே மன்னனெழுதுகின்றான்
பங்கயஞ்சேர்கண்ணாள் பவளக்கொடிநாயகமே
சேராம்புராரும்பெற்ற திறமுள்ளமாங்குயிலே
பட்டமரசாளும் பவளக்கொடியாளே
அன்னநடைமின்னொளிக்கு ஐந்துதிங்களாச்சுதிப்போ
ஸ்ரீமந்தகல்யாணஞ்செய்யவேணுமிப்போ
வரவேண்டுங்கன்னியரே வாராமல்நீயிருந்தால்
உந்தன்திருமுகத்தை யொருநாளும்பார்ப்பதில்லை
கன்னிதிருமுகத்தை காணநான்காண்பதில்லை
இப்படியாகச்சொல்லி எழுதினான்வாசகத்தை
வக்கணைகள்சொல்லி வரிவரியாய்த்தானெழுதி
ஓலையெழுதி யுகந்தகுறியுமிட்டு
இராஜாக்களோலைக்கு இரத்னக்குறியுமிட்டு
மந்திரிகளோலைக்கு மஞ்சட்குறியுமிட்டு

## அருச்சுனன் தூதரிடம் ஓலைகொடுத்தது.

அப்போதுவாள்விஜயன் ஆறைலமுகுமன்னன்
அங்கிருக்குங்காவலரை ஆட்பேரைத்தானழைத்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியர்க்கு
மடக்கோலைநீர்கொடுத்து மன்னவரேவாருமென்றார்
அப்படியேயாகுதென்று அவ்வோலைதானெடுத்து

## தூதர்கள்மதுரைக்கு ஓலைகொண்டுபோகுதல்.

மடக்கோலைகட்டெடுத்து மன்னர்மடியில்வைத்து
சுருளோலைகட்டெடுத்துத் தூதர்மடியில்வைத்து

அத்திபுரமும் நடந்தார் அழகாக
அங்கவளநாடும் நடந்தாரழகாக
எல்லையதுதாண்டி யிளந்தோப்புதான் தாண்டி
வைகைக்கரை தாண்டி வனமாவனந்தாண்டி
காடுசெடிதாண்டி கரியமலைதாண்டி
ஆறுசுனை தாண்டி யதிகவனந்தாண்டி
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனந்தாண்டி
பாதிரிமுல்லை பருத்தவனந்தாண்டி
சின்னமுலாவுகின்ற செந்நாய்புலிகரடி
யாளியுலாவுகின்ற அடர்ந்தவனத்தாண்டி
வேங்கையடர்ந்தவனம் வெண்களாப்பூத்தவனம்
கோங்குபெருத்தவனம் கொன்றைகளாப்பூத்தவனம்
மதுரைத்திசைநோக்கி வாரார்கள் நாதுவர்கள்
வாரவழிதனிலே யென்னென்னவதிசயங்கள்
கொன்றைகள்பொன்காய்க்க வேங்கைகள்முத்தினை
மூத்துக்கால்காய்க்க பவளக்கொடிகனக்க
நீர்முத்துஞ்சாய்களும் நின்றுநிழல்காக்க
நீரோடு நீர்முதலை நின்றுவிளையாட
சேலுங்கயலுமங்கே சென்றுவிளையாட
வாழைபழுக்க வான்கமுகுகுலைசாய
ஆலைபழுக்க அணில்கள்விளையாட
சோலைபழுக்க சுரும்பினங்கள்கொஞ்சிவர
கிள்ளைபழுக்க கிளிகள்விளையாட
மாலையுதிர மலர்கள்சொரிந்துவிழ
சந்தனஆறு ததும்பிப்பெருகிவர
குங்குமஆறு குளம்பிப்பெருகிவர
ஸ்ரீதேவியம்மன் உறைவான்பலதுறையும்
திருவிளையாள்அம்மன் திரிவாள்பலதுறையும்
சோலைமலர்கண்டார் சொக்கருடபாதங்கண்டார்
சொக்கரிடபாதம் தொழுதிரங்கத்தெண்டனிட்டார்
தொழுதிரங்கித்தெண்டனிட்டுந் துருசாய்நடக்கலுற்றார்
ஆனைமலைகண்டார் அம்மனுடபாதங்கண்டார்
அம்மனுடபாத மடிவணங்கித்தெண்டனிட்டார்
அடிவணங்கித்தெண்டனிட்டு அப்பால்நடக்கலுற்றார்

## பொற்றாமரைச்சிறப்பு.

அல்லிபிறந்தாள் அவள்பிறந்தபொய்கைகண்டார்
பூவில்பிறந்தாள் பிறந்தவொருபொய்கைகண்டார்
மலரிற்பிறந்தாளும் அவளுதித்தபொய்கைகண்டார்
பொய்கைப்புதுமைகளைப் போனவருப்பார்த்திருந்தார்
படிக்குப்படிகளொரு பன்னிருகாதவழி
படியகலங்கொண்டதொரு பன்னூற்றைங்காதவழி
ஏறும்படிகளொரு எண்ணூறுகாதவழி
இறங்குப்படிகளொரு எண்ணூற்றைங்காதவழி
நாலுபடிகளின்மேல் ஞானவிளக்கெரியும்
அஞ்சுபடிகளின்மேல் பஞ்சவர்ணப்பதித்திருக்கும்
எட்டுபடிகளின்மேல் இலிங்கப்பதித்திருக்கும்
பத்துப்படிகளின்மேல் பத்தினிமாரோடிநிற்பார்
கட்டோடேதன்கையும் தாமரைப்பூங்காவுகளும்
கெட்டுக்கழுத்தி கடலாடும்பொய்கையது
புத்திரசந்தானம் கொடுக்குமந்தபொய்கையது
கைப்பெண்கள்ஸ்நானஞ்செய்யில் கைலாயஞ்சேர்க்கும்
பொய்கை, மலடிகள்ஸ்நானஞ்செய்யில் மைந்தனளிக்
கும்பொய்கை, கன்னிகைப்பெண்கள்கடுகெனவ்ஸநானஞ்
செய்யில், கன்னிகழிந்திடுவார் காலைகளையீன்றிடுவார்
மைந்தர்களையீன்றிடுவார் மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவார்
பிள்ளைகளையீன்றிடுவார் போதவளர்த்திடுவார்
இப்படியாய்பதவிதரும் இயலானபொய்கைதனை
கண்டானேதாதுவனும் கண்கள்ரண்டுங்கொள்ளாமல்
பார்த்தானேதாதுவனும் பார்வைரண்டுங்கொள்ளாமல்
அப்பொய்கைதான்தாண்டி அப்பாலேபோகலுற்றான்
அரிதேசிபரிதேசி யார்வந்துநின்றாலும்
இல்லையென்றுசொல்லார்கள்மெல்லியுடபுண்ணியத்தா
முத்துப்பவளமு மொன்றுமெவர்நிகளிப்பார் [ல்
வச்சிரமாணிக்கம் வாரியவர்க்களிப்பார் [ணியத்தால்
பிறைத்தேனென்றுபோவார்கள் பொற்கொடியாள்புண்
அப்போதுவேவுகனும் அந்தத்தெருதாண்டி
மற்றுமொருவிதியிலே வாரார்கள்வேவுகார்கள்
ஆனைகட்டிப்போர்ப்படிப்பார் அல்லியுடராச்சியத்தில்
குதிரைகட்டிபோர்ப்படிப்பார் கொப்பனையாள்ராச்சியத்

ஒட்டைகட்டிப்போர்ப்படுப்பார்உத்தமியாள்சீமையிலே
கட்டுக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
அரிதாளறுத்துவர மறுகால்பயிராகும்
அரிதாளின்கீழிருந்து ஐங்கலத்தேன்கூடுகட்டும்
கரும்புமிளநீரும் கண்திறந்துமடைபாயும்
வாழைவடக்கீனும் வான்கமுகுதெற்கீனும்
சோலைகிழக்கீனும் தாப்பபலாமேற்கீனும்
இப்பெரியராச்சியத்தைக் கண்டாரேதூதுவரும்
கண்டாரேதூதுவரும் கண்கள்ரண்டுங்கொள்ளாமல்
பார்த்தாரேதூதுவரும் பார்வைரண்டுங்கொள்ளாமல்
அந்தத்தெருதாண்டி அடுத்ததொருவீதியிலே
மற்றுமொருவீதியிலே வாராரேதூதுவரும்
வேலைப்பழிக்கின்ற விலைமாதர்வீதிகளும்
சேலைவிலைமதிக்கும சேணியர்கள்வீதிகளும்
யானைவிலைமதிக்கும் அரசர்கள்வீதிகளும்
சேனைத்தலைவர்கள் சூழ்ந்திருக்கும்வீதிகளும்
குதிரைவிலைமதிக்கும் குச்சிலியர்வீதிகளும்
ஒட்டைவிலைமதிக்கும் உத்தமர்கள்வீதிகளும்
வேதமுறைதவருத வேதியர்கள்வீதிகளும்
அரசர்கள்வாழுகின்ற அணியணியாய்வீதிகளும்
வில்பிடித்துலாவுகிற வேந்தர்கள்வீதிகளும்
மல்பொருத்தஞ்செய்யும் மன்னர்கள்வீதிகளும்
நீதிமுறைதவரு நெறிமன்னர்வீதிகளும்
சீராய்சரக்குவிற்கும் செட்டிகள்வீதிகளும்
கொட்டியேபொன்னளக்கும் கோமுட்டிவீதிகளும்
தட்டிகொட்டிப்பணிகள்செய்யும் தட்டாரவீதிகளும்
வேணபணிகள்செய்யும் வேளாளர்வீதிகளும்
அகமேபெரிதென்னும் அகமுடையோர்வீதிகளும்
அந்தத்தெருதாண்டி அடுத்ததொருவீதியிலே
மற்றொருவீதியிலே வாராரேதூதுவரும்
இடையர்கள்வீதிவிட்டு இனியதொருவீதிவாரார்
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அல்லியுடவாசலுக்கு வாராரேதூதுவரும்
அரசிலையுந்தோரணமு வார்க்குந்தலைவாசலிலே
அல்லிக்கொடிகட்டி யார்க்குந்தலைவாசலிலே
பூதபணிகள்செய்யும் பொற்கொடியாள்வாசலிலே

மோகம்பணிகள்செய்யும் மின்னனையாள்வாசலிலே
கண்டாரே தூதுவரும் கண்கள்ரெண்டுங்கொள்ளாமல்
பார்த்தாரே தூதுவரும் பார்வைரண்டுங்கொள்ளாமல்
தூதுவருமப்போது துரிசாகத்தானடந்து
ஓடமலர்க்கண்ணாரும் உட்கட்டில்போய்ப்புகுந்து
கோசலநாட்டாள் கொலுக்காணவாராரே
புரவிக்குப்பூச்சூடும் பெண்பெருமாள்வாசல்விட்டு
முத்துப்பதித்திருக்கும் முன்மண்டபந்தாண்டி
வயிரப்படிதான்தாண்டி வாசல்பலதாண்டி
வசந்தமணிமண்டபத்தில் வாழ்பாண்டிசீர்மகளும்
அந்திக்கொலுவிலமர்ந்தாளேயல்லியரும்

தூதர்கள் அல்லியரசாணிக்கு ஓலைகொடுத்தது.

ஓலைகொண்டுபோனதொரு உத்தமனார் தூதுவரும் [து
கொம்பனையாள் முன்னேவந்து கொண்டுவந்தஓலைவைத்
சிங்காதனத்துக்கு முன்பாகவந்துநின்று [டார்
சுருளோலைமுன்னேவைத்துத் தூதுவருதெண்டனிட்
மடக்கோலைமுன்னேவைத்துமாதருக்குத்தெண்டனிட்டா
தெண்டனிட்டவேவுகர்கள் திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுது
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
நீ ஆர்பணியும்வேவுவர்க ளறியவுரையுமென்றாள்
ஆர்பணியுமல்ல அடிமைத்திருப்பணிதான்
பேய்பணியுமல்ல பெருமாள்திருப்பணிதான்
ஆடியபொன்சாயல் அர்ச்சுனனார்வேவுவர்கள் [டார்
அருச்சுனனார் தூதனென்று அடிவணங்கிதெண்டனிட்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
இந்தச்சபைதனி லிராஜசமுகத்தில்
வம்பரர்ச்சுனனார் வந்தாரேயாமானால்
வந்தாரேயாமானால் வார்த்தைக்கு அஞ்சார்காண் [பார்
தம்பிரென்ற அர்ச்சுனனார் துரைச்சிக்குத்தெண்டமென்
கோந்சிதுரைச்சியே கும்பிட்டேனென்றுசொல்வார்
தென்பாண்டிநாட்டாட்குத் தெண்டனிட்டேனென்று
வம்புவிகாதம் விகடங்கள்செய்வாரென்று [ரைப்பார்
போவென்றுவேவுகரைப் போகவிடைகொடுத்து
கனத்தமுடிமன்னருக்குக் கையால்விடைகொடுத்து

காரியர்கள்மந்திரிக்குக் கையால்விடைகொடுத்து
ஆருயிரம்பாண்டியர்க்கு அனுப்பிவிடைகொடுத்து
போரெழுதிமன்னருக்குப் போகவிடைகொடுத்து
கொம்பேரிடையாளும் கொலுக்கலைந்துபிற்பாடு
அல்லிபெருமாள் அரண்மனையினுட்புகுந்தாள்
தாமக்கருங்குழல்மார் தாதியருமோடிவந்து
காலுக்குநீரெடுத்துக் கன்னியருமோடிவந்து
பாதமதுவலம்பி பட்டாலடிதுவட்டி
ஈரமதுவுலர்த்தி இணைக்கவரிவீசலுற்றார்
சாதிமணக்கவரி சந்தனத்தில்தான்றுவைத்து
கோலமணிக்கவரி குங்குமத்தில்தான்றுவைத்து
மாணிக்கஆசனங்கள் மற்றொருத்திதானுமிட்டாள்
இட்டதோராசனத்திலேறியவள்வீற்றிருந்தாள்
கவரியிருபுறமுங் கன்னியர்கள்வீசிநிற்க
வெண்சாமரம்வீச மெல்லிநல்லாளேதுசொல்வாள்

அல்லியரசாணி ஓலைவாசித்தது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
தாமக்கருங்குழலாள் தாதியருக்கேதுரைப்பாள்
கண்டீரோதாதியரே காளையுடவோலைதன்னை
பார்த்திரோதாதியரே பார்த்தருடவோலைதன்னை
கட்டவிழ்த்துவோலைதன்னைக் கலகலென்றுவாசித்தாள்
சுருளோலைகட்டவிழ்த்துத் தோகையரும்வாசித்தாள்
ஓலைச்சுருள்விரித்து ஒப்பனைகள்சொல்லலுற்றாள்
தம்பிபுலர்ந்திரர்க்குச் சகலபாக்கியமுண்டாக
பூவிற்பிறந்ததொரு பொன்மதுரையல்லியற்கு
மலரிற்பிறந்ததொரு வாழ்மதுரையல்லியற்கு
வண்ணைத்துறைச்சியரை வணங்கினேனானுமிப்போ
தென்மதுரையல்லியர்க்கு தெண்டனிட்டேனருச்சுன
னான், தெண்டனிட்டேனென்றதுமே தேன்மொழியுந் [தான்கேட்டு
கும்பிட்டேனென்றதுமே கொம்பனையுங்கண்சிவந்து
சிரியெறிபறந்து செவ்வாய்க்கருக்கலிட்டு
பெண்டுகளைக்கும்பிடுவா ருண்டோடிபூவுலகில்
தேவியரைக்கும்பிடுவா ருண்டோடிவையகத்தில்
கும்பிட்டாரானாலே குந்தியரைக்கும்பிடுவார்

தக்கப்புகழுடைய தருமரைக்கும்பிடுமுர்
வெற்றிமதயானை விமரைக்கும்பிடுமுர்
கும்பிட்டாராலுலே கூத்தியாரைக்கும்பிடுமுர்
இடைச்சிசுபத்திரைக்கு எத்தனையோதெண்டமென்பார்
மாதுசுபத்திரையாள் மலரடியைக்கும்பிடுமுர்

அல்லியரசாணி அருச்சுனவ்மேல்

கூத்துகட்ட நினைத்தது.

எரிபறந்துகண்சிவந்து எதுசொல்வாளல்லியரும்
மனமடங்காக்கோபத்திலுல் மாதுயவளேதுசொல்வாள்
எங்கள்குலத்திற்கு ஏற்காதுகும்பிடுதான்
இராஜகுலத்திலே நடவாதகாரியந்தான்
கும்பிட்டஅர்ச்சுனர்மேல் கூத்துகட்டியாடவேணும்
வணங்கினஅர்ச்சுனர்மேல் விகடகவிபாடவேணும்
இடைகட்டியாடவேணும் கரணங்கள்போடவேணும்
பார்த்தருச்சுனரைப் பங்கப்படுத்தவேணும்
வேந்தருச்சுனரை விகடங்கள்செய்யவேணும்
போறேன்காண்தாதியரே போர்விஜயர்தன்கொலுவில்
செல்லுகிறேன்தாதியரே தேர்விஜயன்தன்கொலுவில்
நானிருந்தஆசனத்தில் நீயிருந்துஆளுமென்முர்
போய்நான்வருமளவும் பொன்மதுரையாளுமென்முள்
சென்றுவருமளவுந் தென்மதுரையாளுமென்முள்
தாமக்கருங்குழலாள் தாதியவள்தான்கேட்டு
காளையருச்சுனரைக் கண்டுநெடுநாளாச்சு
பார்த்தருச்சுனரைப்பார்த்துநெடுநாளாச்சு
நானும்வருகிறேன் நாடாளுங்கன்னியரே
உடனேவருகிறேனுலகாளும்ராஜாத்தி
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு

அல்லியரசாணி போரெழுதியை

அழைத்துவரச்சொன்னது.

அப்படியேயாலுலே யானந்தவாழ்மார்பி
பொன்னுமலைநாடாளும் போரெழுதியண்ணுவை
அண்ணுவைப்போ அழைத்தோடிவாருமென்முள்

அந்தவுரைகேட்டு ஆரணங்குதாதியரும்
எலுமிச்சம்பட்டெடுத்து இழுத்துவரிந்துகட்டி
நாகவன்னப்பட்டெடுத்து நன்றாய்வரிந்துகட்டி
போருளவள்தாதி பொன்னாபரணமின்ன
பொற்பிரம்புகோல்பிடித்துப் போருளவள்தாதி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
எட்டடியுமோரடியா யெட்டிநடைநடந்து
அதிரநடைநடந்து அங்காடிவீதிவிட்டு
பொன்னின்மலைநாடாளும் போரெழுதிமுன்னேவந்து
சிங்காதனத்துக்கு முன்பாகதெண்டனிட்டாள்
தெண்டனிட்டதாதி திரும்பவெழுந்திருந்து
மோதிரமின்ன முடிமேலேகைதொழுதாள்
பொன்னின்மலைநாடாளும் போரெழுதிதான்பார்த்து
நீ-ஆர்பெண்ணேதாதி அறியவுரையுமென்றாள்
நான்-ஆர்பணியுமல்ல அடியேன்திருப்பணிதான்
பேர்பணியுமல்ல பெருமாள்திருப்பணிதான்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளுந்தனைத்தான்
ஆனந்தவாழ்மார்பி அழைத்தோடிவாருமென்றாள்
வாருமையா வென்றுசொல்லி மலரடிக்குத் தெண்டனி
ட்டாள், பொன்னின்மலைநாடாளும் போரெழுதியேது.
இந்நேரமட்டு மிருந்தேன்கொலுமுகத்தில் [சொல்வார்
இப்போதுஎன்னை வரவழைத்தகாரியமேன்
ஏதுவகையாக என்னைவரவழைத்தாள்
வரவழைத்தகாரியத்தை வாய்திறந்துசொல்லுமென்றார்
தாமக்கருங்குழலாள் தாதியவளேதுசொல்வாள்
இராஜ்ஜாத்திகாரியங்கள் நமக்குத்தெரியுமோ
கனமுடைவாள்காரியத்தின் கபடம்வெளிப்படுமோ
மந்திரிமார்காரியத்தின் மர்மம்வெளிப்படுமோ
என்னமோயேதோதான் ஏதொன்றும்நானறியேன்
இஷ்டமுடனே எழுந்திருந்துவாருமென்றாள்

போரெழுதிராஜன் அல்லியரசானியிடம் வந்தது.

பொன்னின்மலைநாடாளும் போரெழுதிதான்கேட்டு.
மந்திரிதன்னுடனே மகாராஜனேதுசொல்வான்
தக்கப்புரவிகட்டி தனிரதத்தைக்கொடுவாவென்றான்

இரதம்வந்தவுடனே இரத்தினபூரணம்பூண்டு
முத்தமிழ்தியடையைத் தொட்டுமிகநடந்து
அரண்மனையேமுகட்டும் அந்தப்புரந்தாண்டி
எதிரமிரதத்தில் எட்டுதிசைதானதிர
தாதியர்கள்பின்னாகத் தானுமேமுன்பாக
டுமல்லிநல்லாள்திசைநோக்கி வேகமாய்வருகிறார்
கடையுங்கடைத்தெருவுங் கருமாரவீதிவிட்டு
மாநகராமாளும் மகாராசியாளிசென்றார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்நாயகமே
என்னையழைத்தபணி யேதுபணிசொல்லுமென்றார்

அல்லியரசாணி பேரெழுதியை

அரசாளவைத்தது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
அன்று-உம்மையழைத்தது ஒன்றுக்குறைவுமில்லே
நான்-வரவழைத்தகாரியத்தை வகையுடனேசொல்லுகி
கொச்சிமலைநாடாளும் குணமில்லாராசாக்கள் [றேன்
பகுதிபணம்கட்டவில்லே பாங்கியரைப்போகவிட்டேன்
கப்பணங்கட்டவில்லே கன்னியரைப்போகவிட்டேன்
அந்தக்கணக்கை யறியவேபோகவேணும்
ஏழரைநாளையிலே யிவ்விடம்வந்துசேருகிறேன்
நான்போய்வருமளவும் நன்மதுரையாளுமென்றாள்
போய்நான்வருமளவும் பொன்மதுரையாளுமென்றாள்
திங்குகளில்லாமல் தென்மதுரையாளுமென்றாள்
அழும்புகளில்லாமல் அணிமதுரையாளுமென்றாள்
பொன்னின்மலைநாடாளும் போரெழுதிதான்கேட்டு
அருளருளுமென்னம்மா அப்படியேயாகுதென்றார்

அல்லியரசாணி ஸ்நானஞ்செய்தது.

அப்போதுஅல்லி அரண்மனையி னுட்புகுந்து
மஞ்சனச்சாலையிலே மங்கையும்போய்புகுந்தாள்
அங்கொருதாதி அறிவுடையாள்தானெழுந்து
இன்றுமுறையென்னு தென்று எழுந்திருந்தாள்சீக்கிர
சந்தனமுங்குங்குமமும் சாந்தும்பனிநீரும் [மாய்
குங்குமமுஞ்சந்தனமும் குளிநீரும்பனிநீரும்

சாலுசாலுகளாக நிரப்பிவைத்தார்தையலர்கள்
அப்போதுஅல்லியரும் ஆனந்தவாழ்மார்பி
ஆடைகளைந்துமவள் ஆபரணந்தான்களைந்து
மஞ்சனீராடி மயிர்கோதிபின்போட்டு
தீர்த்தம்பலவாடி தேனின்குழலாளும்
ஈரமுலர்த்தி யிழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீளிர்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லித் திருநீற்றுக்காப்பணிந்து
அரகராவென்றுசொல்லி யணிந்தாளேவெண்ணீறு
மூஷிகவாகனரை முறையுடனேபூசைசெய்து
ஆதிசிவனைநோக்கி யன்போடுகைதொழுது
பத்திரம்போட்டுப் பரமரைப்பூசைசெய்து
மல்லிகைத்தாளெடுத்து மகாதேவியைப்பூசைசெய்து
திருத்துழாய்தானெடுத்து திருமாலைப்பூசைசெய்து
கொன்றைமலர்போட்டுக் குமரரைப்பூசைசெய்து
தும்பைமலர்போட்டுச் சூரியரைத்தெண்டனிட்டு
திருவிளக்குப்பூசைசெய்து தேனின்குழலாளும்
ஐயனைமெய்யனை ஆயிரங்கண்ணிந்திரனை
பொய்சொல்வர்க்கெல்லாம் புறங்காக்கும்புண்ணியனை
மெய்சொல்வர்க்கெல்லாம் விளக்கொளியாய்நின்றவரே
முப்பத்துமுக்கோடி முனிவரையுங்கைதொழுது
நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையுந்தெண்டனிட்டு
அடியார்களியாவரையும் அன்புடனேதெண்டனிட்டு
சுற்றிவந்துநீர்தெளித்துச் செவிதனிலேபூச்சொருகி
பூசைமுடித்தாளே பொன்மதுரையல்லியரும்

அல்லி அரசாணி போஜனமுண்பது.

அமுதுண்ணுமண்டபத்திற் சென்றாளேயல்லியரும்
அங்குமொருதாதி அறிவுடையாளோடிவந்து [மாய்
இன்றுமுறையென்னுதென்று எழுந்திருந்தாள்சீக்கிர
பூமியையொத்ததொரு பொன்னால்மணைபோட்டாள்
செம்பொன்முகக்கால் நிறுத்தி சேர்ந்தநாற்காலியிட்டா
புலிமுகக்கால் நிறுத்திப் பொன்னால்தடுக்குமிட்டார்
இட்டதோராசனத்தி லேறியவள்வீற்றிருந்தாள்
வாழையிலைபோட்டு மணிச்சொம்பில்நீர்தெளித்து

எட்டடிவாழை யிலைபோட்டு நீர்தெளித்து
தும்பைமலர்போலே போறனமுந்தான்சொரிந்து
தாளிதமும்பச்சடியுந் தன்னில்வகைக்கறியும்
சுட்டுங்கறியும் குழம்பில்வகைக்கறியும்
பொரித்தபொரிக்கறியும் பொன்போல்சிறுபருப்பும்
ஆயிரத்தெட்டு அருங்கறியும்போசனமும்
சுற்றிக்கறிகள்வைத்துப் புற்றருக்குநெய்சொரிந்தாள்
கன்னியிளங்கொடிமார் காராவநெய்சொரிந்தார்
அந்தஅடிசில் அமுதுண்டபிற்பாடு
அந்தளிகைமாற்றி நல்ல பொற்றளிகைமுன்னேவைத் [தார்
காச்சியபாலுந் திருத்தியமுக்கனியும்
வாழைப்பழமும் மதுரையில்மாம்பழமும்
வேரின்புறத்தில் வெடித்தபலாச்சுளையும்
கொம்பின்சிறுதேனுங் கோதுபடாச்சர்க்கரையும்
மலையின்சிறுதேனுங் வங்காளசர்க்கரையும்
அத்தனையுங்கொண்டு அமுதுபடைத்தார்கள்
அந்தஅடிசில் அமுதுண்டபிற்பாடு
பாலடிசிலுண்டு பசிதீராற்கையலம்பி
உருவுகொண்டுவாய்துடைத்து உத்தமியும்வீற்றிருந்தா
அங்குமொருதாதி அன்போடெழுந்திருந்து
வாசங்கொடுக்குமயிலனையாளோடிவந்து
இன்பங்கொடுக்குமினி துடையாளோடிவந்து
வாசகலப்பேழை வலகுலுக்கிந்தாள்திறந்து
வாடாயிலைச்சுருளும் வன்னத்துவர்பாக்கும்
கோர்வையிலைச்சுருளுங் கொத்துத்துவர்பாக்கும்
ஏலம்லவங்கமும் இன்பக்களிப்பாக்கும்
ஆரங்கிப்பாக்ககளும் அதற்கேற்றவெற்றிலையும்
காய்ச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
சாதிப்பெருங்கடலில் சங்குசுட்டசுண்ணம்பும்
சுருளைச்சுருளமர்த்திச் சுண்ணம்பைச்சூட்சமிட்டு
சுற்றிலிட்டபொன்மடலுக் குள்ளேசுருளமர்த்தி
வைத்துக்கொடுத்தாள் மதிக்குமந்தவாசகத்தை
அந்தமுகவாசகத்தை வாங்கியந்தஅல்லியரும்
வாசமுந்தின்று மகிழ்ந்திருக்கும்வேளையிலே
இன்பமுந்தின்று இனித்திருக்கும்அல்லியரும்
அந்தச்சமயத்தில் அருங்கிளியாளோதுசொல்வாள்

## அல்லியரசாணிக்கு பல்லக்குசோடிக்கச் சொல்லியது.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாள் நாயகமும்
தாமக்கருங்குழலாள் தாதிகளைத்தான்பார்த்து
பாங்கிகளேயெந்தனுக்கு பல்லக்குஜோடியென்றாள்
அந்தவுரைகேட்டு அருங்கிளிமார்தானெழுந்து [ந்து
சொல்லப்பெற்றோமென்றுசொல்லிசுருக்காயெழுந்திரு
கூறப்பெற்றோமென்றவர்கள் கும்பிட்டெழுந்திருந்து
பச்சைமுகப்பல்லக்கு பைங்கிளிமாரேந்திவந்து
பட்டாலிழைத்துப் பவழத்தால்சித்திரித்து
முத்தாலிழைத்து முழுவயிரஞ்சித்திரித்து
தங்கத்திறைலே தகுந்தபடிசித்திரித்து
அபரஞ்சிப்பொன்னு லழகாகச்சோடித்து
பல்லக்குகொண்டுவந்து பாங்கிமார்முன்னேவைத்து
கொண்டுவந்தோம்பல்லக்கென்று கும்பிட்டாரல்லியரும்

## அல்லியரசாணி துரௌபதையிடம் வந்தது.

அப்போதுயல்லியரும் ஆரணங்கேதுசொல்வாள்
பல்லக்கின்மேலாகப் பத்தினியுமேறினாள்
தந்தமுகப்பல்லக்கில் தார்குழலாளேறினாள்
கால்பிடிக்குந்தோழி கருங்குழல்மாரேறினாள்
ஈயடிக்குந்தாதிகளும் எறும்படிக்குந்தாதிகளும்
கொசுவடிக்குந்தாதியர்கள் கூடவேயேறினார்கள்
வெண்சாமரைவீசும் மெல்லியர்களேறினார்கள்
கெண்டிகையில் நீரெடுத்துக் கிளிமொழிமாரேறினார்கள்
பக்கம்பிரம்படிக்கப் பாங்கிமார்சூழந்துவர
சுற்றிப்பிரம்படிக்கச் சூழ்ந்துவரதோகையர்கள்
மாறிப்பிரம்படிக்க மகுடமுடியல்லியர்க்கு
முப்பத்திரண்டுவகை மேளமடித்துவர
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவுப்பலதாண்டி
தோருவடிவழகி துரௌபதையாள்வீதிவந்தாள்
தோருவடிவழகி துரௌபதையாள்மாளிகையில்
வாசற்படிகாக்கும் வாழ்பாண்டிமங்கையவள்
தோருவடிவழகி துரௌபதையாள்முன்னேவந்து
சிம்மாசனத்துக்கு முன்பாகவந்துநின்று

வைகைநகராளும் வாழ்பாண்டிநாட்டாளும்
மற்றுஞ்சிலபெண்டுகளும் வாரார்கள்வீதியிலே
வாரார்களென்றுசொல்லி வணங்கியவள்தெண்டனிட் [டாள்
தோளுவடிவழகி துரௌபதையுந்தான்கேட்டு
அல்லிவரவுசொல்ல ஆரணங்குஉள்மகிழ்ந்து
ஆலத்திகாட்டுங்காடி அர்ச்சுனனார்தேவியர்க்கு
தென்பாண்டிநாடாட்குத் திருஷ்டிகழியுங்கடி
தாமக்குழலாளுந் தாதியவள்கேட்டு
சொல்லப்பெற்றேனென்று சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றேனென்று கும்பிட்டெழுந்திருந்து
முத்திலாலாத்தி முத்துநூறாயிரமாம்
பவளத்தாலாலாத்தி பத்துநூறாயிரமாம் [ர்கள்
செஞ்சோறும்வெண்சோறும் தேன்மொழிக்குச்சுற்றின
சுண்ணாம்புமஞ்சளுஞ் சுற்றியெறிந்தார்கள்
கற்பூரவாலாத்தி காட்டினார்கன்னியர்கள்
ஆலாத்திகாட்டி அணியிழைமார் நீங்கினபின்
திருஷ்டிகழித்தபின் தென்பாண்டிநாட்டாளும்
அல்லிப்பெருமாளும் அரசாளும்நாயகியாம்
ஓடமலர்க்கண்ணாளும் உட்கட்டிற்போய்புகுந்து
தோளுவடிவழகி திரோபதையாள்முன்னேவந்து
காண்கிறேனாச்சியென்று கால்மேல்முடிசாய்ந்து
வணங்கிறேனாச்சியென்று வளநாடிதெண்டனிட்டாள்
வந்துபணிந்தவளைக் கண்டந்ததுரௌபதையும்
உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
சனனங்குளிர்ந்து சர்வாங்கம்பூரித்து
வாழ்விர்வளர்ந்திடுவீர் மகப்பேறுபெற்றிடுவீர்
நிற்பீர்நிலைநிற்பீர் நீடுழிவாழ்ந்திடுவீர்
பெருமாள்கிருபையாலே புதல்வரைநெற்றிடுவீர்
என்னைப்பெறுவீர் எரித்தார்முடிபெறுவீர்
பிள்ளைப்பெறுவீர் பெருமாள்பதம்பெறுவீர்
சாலித்தயிர்கடைவீர் சம்பத்துடன்வாழ்ந்திடுவீர்
போதத்தயிர்கடைவீர் புத்திரரைப்பெற்றிடுவீர்
சொக்கரருளாலே தொல்லுலகையாண்டிடுவீர்
அம்பனருளாலே அரசுதிலையாண்டிடுவீர்
வாள்விஜயன்மங்கிலிய மாறுமல்வாழ்ந்திடுவீர்
வாழ்விர்காணென்று மனங்குளிவாழ்த்தினள்

வையாறவாழ்த்திருள் மாருதுரௌபதையாள்
அங்கிருக்குந்தாதிகளை அரிவைகளைக்கண்காட்டி
அழகியசிரல்லியற்கு ஆதனங்கள்போடுமென்ருள்
தேன்மொழிமார்கேட்டு திவிரமாய்ந்தானெழுந்து
மாணிக்கசிம்மாதனம் மாதருக்குசோடித்தார்
ஆணிப்பொன்சிம்மாதனம் அரிவையற்குசொப்பனிட்
சிம்மாதனமுடித்து வெண்போற்றுகில்முடித்தார் [டார்
பட்டத்தரசியற்கு இட்டாள்சிம்மாதனங்கள்
இட்டசிம்மாதனத்தி லேறியவள்வீற்றிருந்தார்
இப்படியாக இவர்களிருக்கையிலே

## சுபத்திரை கனவுகண்டது.

அப்போசுபத்திரையும் ஆனந்தவாழ்மார்பி
அச்சுதனூர்தங்கை அருச்சுனனூர்பத்தினியும்
நித்திரையில்சொர்ப்பனமும் நேரிழையுங்கண்டாளே
சொர்ப்பனங்கண்டாள் துலங்குமணிமுடியாள்
ஆணுலழகுமன்னன் அச்சுனராஜதுரை
கச்சணிந்துவில்லெடுத்துக் காண்டீபங்கைபிடித்து
கொற்றவரருச்சுனரை மெத்தையின்மேற்காணலுற்ருள்
காண்டீபரருச்சுனரைக் கண்டாள்சுபத்திரையும்
பொட்டெனவேகண்விழித்துப் பூவைசுபத்திரையும்
தாமக்குழலாள் தாதியரைத்தான்பார்த்து
அவர்எங்கேயிருப்பாரோ எழில்விசையனருச்சுனரும்
என்றுசொல்லிசுபத்திரையும் ஏங்கிமனந்தளர்ந்தாள்
தாமக்குழலாளுந் தாதியவள்தான்கேட்டு
பத்தினியாள்நம்மாச்சிப் பார்த்திபன்சூதுதன்னை
உத்தமியாள்துரௌபதையும் உபாயமறிந்திருப்பாள்
கட்டழகிதுரௌபதைக்குக் கபடந்தெரிந்திருப்பாள்
தேர்விஜயன்சூதுகளைத் மகதேவியறிந்திருப்பாள்
மன்னவன்சூதுகளை மகதேவியறிந்திருப்பாள்
அங்கேநாம்போனுல் அறியலாமென்றுரைத்தாள்
தேவியிடஞ்சென்ருலே தெளியலாமென்றுரைத்தாள்

## சுபத்திரைபல்லக்கு சோடிக்கச்சொல்லியது.

அச்சுதன்றங்கை யாரணங்குசுபத்திரையும்
தாமக்குழலாளுந் தாதிகளைத்தான்பார்த்து

பாங்கிகளேயெந்தனுக்குப் பல்லக்குசோடியென்றான்
அருளருஹமென்னச்சி அப்படிக்கேயாகுதென்று
பட்டாலிழைத்துப் பவளத்தால்சித்திரித்து
முத்தாலிழைத்து முழுவயிரஞ்சித்திரித்து
வச்சிரத்தாலே வரம்புகள்சோடித்து
காம்பரிந்தஜங்கலப்பூ கனமாகத்தான்சொரிந்து
பல்லக்குவந்து பாவையர்க்குமுன்னேவைத்து [ட்டார்
சோடித்தேயாச்சியென்றுதொழுதிறைஞ்சிதெண்டனி

சுபத்திரை துரௌபதையிடம் வந்தது.

அச்சுதன்றங்கை யாரணங்குசுபத்திரையும்
அருச்சுனன்றேவியர்க ளருங்கிளிமாரெல்லாரும்
அவரவர்கள்வாகனத்தி நினைவருமேறினார்கள்
சோரவளநங்கை சுபத்திரைநாயகியும்
பல்லக்கின்மேலாகப் பத்தினியுமேறினாள்
நாகமடந்தை நறுநுதலாள்நாயகமும்
பொற்கலசநன்முலையாள் போகவதிநாயகமும்
வண்டார்குழலாள் வயிர்வள்ளிநாயகமும்
பங்கயஞ்சிர்கண்ணாள் பவளக்கொடிநாயகமும்
பார்ப்பான்மகளும் பதிவுடையபத்தினியும்
பல்லக்கின்மீதில் பாவையிளங்கொடிமார்
எட்டுத்தலைநாகம் யெங்கும்படைசூழ
பத்துத்தலைநாகம் பரிவேட்டையாடிவர
மேலேநாகங்கவிய வீதிபுறப்பட்டார்
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
சித்திரவீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
தோமுவடிவழகி துரௌபதையாள்வீதிவந்தார்
தோமுவடிவழகி துரௌபதையாள்மாளிகையிலே
வாசற்படிகாக்கும் வாழ்பாண்டிமங்கையர்கள்
தோமுவடிவழகி துரௌபதையாள்முன்னேவந்து
அடிவணங்கிதெண்டனிட்டு அரிவையருக்கேதுசொல்
ஆச்சிநீர்கேளும் அடியேனொருவார்த்தை [வாள்
அச்சுதன்றங்கை யாரணங்குசுபத்திரையும்
நாகமடந்தை நறுநுதலாள்நாயகமும்
வண்டார்குழலாள் வயிரவள்ளிநாயகமும்

பொற்கலசநன்முலையாள் போகவதிநாயகமும்
பங்கயஞ்சீர்கண்ணாள் பவளக்கொடிநாயகமும்
பார்ப்பான்மகளும் பதிவுடையபத்தினியும்
மற்றுஞ்சிலபெண்களும் வருகிறார்வீதியிலே
வருகிறாரென்றுமே மாதுமனமகிழ்ந்து
தோளுவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அருச்சுனன்றேவியர்க ளனைவரும்வந்தாலே
அத்தண்டபெண்டுகட்கும் ஆலாத்திகாட்டுமென்றாள்
தாமக்குழலாளுந் தாதியவள்கேட்டு
அப்படியேயாகுதென்று அவசரமாயோடிவந்து
முத்தினாலாலாத்தி முகத்தின்முன்சுற்றினார்கள்
பவளத்தாலாலாத்தி பாங்கியர்கள்சுற்றினார்கள்
கர்ப்பூரஆலாத்தி காட்டினார்கன்னியர்கள்
சுண்ணாம்புமஞ்சள் சுற்றியெறிந்தார்கள்
ஆலாத்திகாட்டி யணியிழைமார் நீங்கியபின்
திருஷ்டிகழற்றியபின் தேவிமாரெல்லோரும்
ஓடமலர்க்கண்ணாள் உட்கட்டிலேபுகுந்தார்
தோளுவடிவழகி துரோபதையைத்தான்பார்த்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளைப்பார்த்து
இருவருக்குந்தெண்டனிட்டா ரேலக்கருங்குழல்மார்
காண்கிறோமாச்சியென்று கால்மேல்முடிசாய்ந்தார்
தோளுவடிவழகி துரோபதைநாயகமும்
வந்துபணிந்தவரைக் கண்டுமனமகிழ்ந்தாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
அவளைப்பாராததுபோல பராமுகமாய்த்தானிருந்தாள்
காணாததுபோலே கபடமாய்த்தானிருந்தாள்
மகுடமுடிசாய்த்து மர்மமுடனிருந்தாள்
தோளுவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
வாழ்வீர்வளர்ந்திடுவீர் மைந்தர்களைப்பெற்றிடுவீர்
நிற்பீர் நிலைதரிப்பீர் நீடூழிவாழ்ந்திருப்பீர்
பெருமாள்கிருபையாலே புதல்வரைப்பெற்றிடுவீர்
மஞ்சட்சரட்டுடனே மகிழ்ச்சியாய்வாழ்ந்திடுவீர்
அமுக்குச்சரட்டுடனே யநேகநாள்வாழ்ந்திருப்பீர்
வாள்விஜையன்தன்னுடனே மாறாமல்வாழ்ந்திருப்பீர்
தோளுவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அங்கிருக்குந்தாதிகளை அருங்கிளிமாரையழைத்து

அருச்சுனனார்தேவிக்கு ஆசனங்கள்போடுவென்றான்
அப்போதுதாதியர்கள் அவசரமாயோடிவந்து
வாள்விஜயன்தேவிகட்கு வண்ணத்தடுக்குமிட்டார்
போர்விஜயன்தேவிகட்குப் பொன்னால்தடுக்குமிட்டார்
இட்டதோராசனத்தி லேறியவள்வீற்றிருந்தாள்
ஆசனத்தின்மேலே யமர்ந்ததின்பிற்பாடு
அங்குமொருதாதி யறிவுடையாளோடிவந்து
வாடாயிலைச்சுருளும் வன்னத்துவர்பாக்கும்
கோர்வையிலைச்சுருளும் கொத்துத்துவர்பாக்கும்
ஆரங்கிப்பாக்குகளும் மோரங்கிவெற்றிலையும்
காச்சாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
ஏலவிலவங்கமும் இன்பக்களிப்பாக்கும்
சாதிப்பெருங்கடலில் சங்குசுட்டசுண்ணாம்பும்
வைத்துக்கொடுத்தாளும் மதிக்குமந்தவாசகத்தை
வந்திருந்தபெண்களெல்லாம் வாங்கிமனதுடனே
இன்பமாய்த்தின்று இனித்திருக்கும்வேளையிலே
தோளுவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அச்சுதன்றங்கை யாரணங்குசுபத்திரையும்
விருந்தமுதுண்டு விடையாறிப்போனீரே
மற்றொருநாள்வந்ததில்லை மணிமாரன்றங்கையரே
இப்போதுவந்தவகை யெனக்கறியச்சொல்லுமென்றாள்

## சுபத்திரை கனவுகண்டதை துரோபதைக்குச் சொல்லியது.

அச்சுதன்றங்கை யாரணங்குசுபத்திரையும்
தோளுவடிவழகி துரோபதைக்கேதுசொல்வாள்
ஆச்சி இராப்பொழுதித்திரையில்யான்கண்டேன்சொப்
சொப்பனங்கண்டேன் துலங்குமணிமுடியே [பனங்கள்
அவர்-கச்சணிந்துவில்லெடுத்துகாண்டீபங்கைபிடித்து
வேந்தரருச்சுனரை மெத்தையின்மேற்கண்டேனே
எங்கேயிருப்பாரோ யெழில்விஜயரருச்சுனரும்
ஆச்சியைக்கேட்டு அறியலாமென்றுசொல்லி
ஆசையினாலிங்குவந்தேன்ஆச்சியரேயென்றுரைத்தாள்
தோளுவடிவழகி துரோபதையுந்தான்கேட்டு
சோரவளநங்கை சுபத்திரைக்கேதுசொல்வாள்
காசால்மடையடைத்தால் களிம்புபிடிக்குமென்று

பணத்தால்மடையடைத்தால் பாசிவந்துசேருமென்று
துட்டால்மடையடைந்தால் தூசேறப்போகுதென்று
சோற்ருல்மடையடைக்கும் சோழன் திருமடந்தை
அவள்-வாழாதிருந்தாளே மாதுசிலகாலம்
அவள்-கூடாதிருந்தாளே கொற்றம்பூராஜாத்தி
நாங்களிருவரும் இராஜாவைத்தானழைத்து
கொற்றவராருச்சுனரை குறவேடந்தான்போட்டு
மாதுநல்லாள்வாசலுக்குமன்னவரைப்போகவிட்டோம்
அடிஅன்றுமுதலாக அருச்சுனரங்கிருந்தார்
மாதந்தமின்னெளிக்கு மைந்தனுமுண்டாச்சு
அன்னநடைமின்னெளிக்கு ஐந்துதிங்களாச்சுது
ஸ்ரீமந்தகலியாணஞ் செய்யவேவேணுமென்று
வ்ண்ணப்பமிட்டார்காண் வேல்பொருதுங்கண்ணளே
என்றுமவளுரைத்தாள் ஏலப்பசுங்கிளியும்
சுபத்திரையும்தான்கேட்டு சொல்லொருவார்த்தை
ஆச்சி-தெய்வகுரத்தியைபோல் தெருவிதிவந்தாள்காண்
அழைக்கவேவிண்ணப்ப மென்ருர்கள்தாதியர்கள்
போனல்தான்போகட்டும் பூங்குறத்திகிட்டாதோ
குறிபார்க்கவேண்டுமென்ருல் குறத்திகிடையாதோ
மறுபடியும்வாராளோ மலேக்குறத்திநாயகமும்
என்றுயிருந்தேன்காண் ஏலப்பசுங்கிளியே
அருச்சுனரென்றறிந்தால் அப்போதழைத்திடுவேன்
ஆனகுறிகேட்டு அருச்சுனரையனுப்பிடுவேன்
உற்றகுறிகேட்டு உத்தமரையனுப்பிடுவேன்
தெரியாமற்போனதினல் திகைத்தாபோல் நின்றுவிட்டேன், அறியாமற்போனதினல்அசந்தாப்போல் நின்று [விட்டேன்

அல்லி திருமுகம் வாசித்தது.

பிறவாமுடி-தரித்த பெண்பெருமாளல்லியரும்
தோருவடிவழகி துரொபதையைத்தான்பார்த்து
கண்டீரோ ஆச்சியரே காணுடவோலேதன்னை
காணவிட ஒல்லயென்ன கன்னிமனமகிழ்ந்து
பார்த்திரோ ஆச்சியரே பார்த்தருளவோலேதன்னை
பார்த்தருடவோலேயென்ன பத்தினியும்உளமகிழ்ந்து
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்

ஓலைச்சுருள்விரித்து ஒப்பனைகள்சொல்லுகிறாள்
தம்பிபுலந்திரர்க்குச் சகலபாக்கியமுண்டாக
பாண்டிப்புலந்திரர்க்குப் பாக்கியங்களுண்டாக
பூவிலவதரித்த பெண்பெருமாளல்லியற்கு
மலரிலவதரித்த வார்மதுரையல்லியற்கு
கனகமுடியல்லியர்க்குக் கைதொழுதேனடியேன்
கோச்சிதுரைச்சியற்கே கும்பிட்டேனடியேன்
வண்ணைத்துரைச்சியற்கு வணங்கினேனருச்சுனனான்
தென்பாண்டிநாட்டாளை தெண்டனிட்டேனருச்சுனனு
ஆச்சி-இப்படிக்குச்சொல்லி எழுதுவரோராச்சியத்தில்
பெண்டுகளைக்கும்பிடுவா ருண்டோடிபேருலகில்
மாதர்களைக்கும்பிடுவா ருண்டோடிவையகத்தில்
அவர்-கும்பிட்டாராலே குந்தியரைக்கும்பிடுவார்
கும்பிட்டாராலே தருமரைக்கும்பிடுவார்
கும்பிடுவார்கும்பிடுவார் வீமரைக்கும்பிடுவார்
கும்பிட்டாராலே கூத்தியரைக்கும்பிடுவார்
வேந்தரருச்சுனரும் வேசிகளைக்கும்பிடுவார்
தெண்டனிட்டாராலே சிவனுக்கேயொப்பிடலாம்
எங்கள்குலத்துக்கு ஏற்குமோகும்பிடுநான்
நமதுகுலத்தில் நடக்குமோஆச்சியரே
கும்பிட்டஅருச்சுனர்மேல் கூத்துகட்டியாடவேணும்
வணங்கினஅருச்சுனர்மேல் விகடகவிபாடவேணும்
பார்த்தருச்சுனரைப் பங்கப்படுத்தவேணும்
வேந்தருச்சுனரை வெட்கங்கெடுக்கவேணும்
போறேன்காணுச்சியரே போர்விஜயன்தன்கொலுவில்
செல்லுகிறேனாச்சியரே தேர்விஜயன்தன்கொலுவில்
தோகைவடிவழகி திரௌபதையுந்தான்கேட்டு
கண்டகண்டகோலமெல்லாம் குத்திபெற்றமக்களுக்கு
நமக்குந்தானோதகுமோ நாடாளுங்கன்னியரே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு [ருள்
மண்டியிட்டெழுந்திருந்தாள் வாள்போட்டுகூரையென்
மண்டியிட்டெழுந்திருந்தாள் வில்போட்டுகூரையென்
தோகைவடிவழகி திரௌபதையுந்தானசைந்து [ருள்
கால்நடுங்கக்கைநடுங்கக் கனத்தவிழிபிதுங்க
உள்ளம்நடுநடுங்க உடம்புபதறிவிழ [வில்
அம்மாபோகலாம்போகலாம் போர்விசயன் தன்கொலு

செல்லலாய்செல்லலாம் தேர்விசையன்தன்கொலுவில்
போய்வாருமல்லியென்றுள்பொன்னின் நல்லாள்துரோ
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும் [பதையும்
வாள்பிடுங்கிக்கிழ்போட்டாள் மாலைக்கருங்குழலும்
ஆறினாள்கோபம் அமர்ந்தாள்கொலுமுகத்தில்
திர்ந்தாள்கோபம் தெளிந்தாள்கொலுமுகத்தில்
பிறவாமுடித்த பெண்பெருமாளல்லியரும்
தோழுவடிவழகி துரௌபதைக்கேதுசொல்வாள்
ஆச்சி-பார்த்தரருச்சுனரை பங்கப்படுத்தாவிட்டால்
வேந்தரருச்சுனரை வெட்கங்கெடுக்காவிட்டால்
எடுத்ததுவில்லுமல்ல என்பேரும்அல்லியல்ல
பிடித்ததுவில்லுமல்ல பெண்பெருமாள் நானுமல்ல
என்றுசபதமிட்டா ளேலக்கருங்குழலாள்
வீசிநடந்நாளே விஜயனுடதோழியுடன்
மற்றுமொருமண்டபத்தில்மாதுகன்னிபோய்புகுந்தாள்

## அல்லி சிலபெண்களைச் சோடித்துக்கொண்டது.

## மூடுகு.

மோலோகத்துரம்பையைப்போ லிரண்டு மெல்லியரை
சோடித்தாள், கீழ்லோகத்துரம்பையைப்போ லிரண்டு
கிளிமொழியைசோடித்தாள், தெய்வலோகரம்பையைப்
போ லிரண்டுதேன்மொழியைசோடித்தாள், பூலோகரம்
பையைப்போ லிரண்டுபொற்கொடியைசோடித்தாள்
கைலாசரம்பையைப்போ லிரண்டுகன்னியரைசோடித்
தாள், வைகுந்தரம்பையைப்போ லிரண்டுவனக்கிளியை
[சோடித்தாள்

## அல்லி ஈஸ்வரியை ஆண்முகங்கேட்டது.

## வேறு.

பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
ஏழாம்நிலையும் எழுநிலையின்மேலேறி
மேலாங்கதவை விடுகதவைத்தான்திறந்து
அங்கயற்கண்ணம்மை அவள்வாழும்கோயிலுள்ளே
வந்தேயொருபுறமாய் மாதுவணங்கிநின்று
தாயேமகேஸ்வரியே சங்கரியேவல்லவியே

ஆயிபுமையவளே அகிலாண்டநாயகியே
சொக்கருக்கிருக்கும் அம்பபசுங்கிளியே
சிவனாருக்கிருக்கும் தேன்மொழியேமீனாட்சி
எந்தன்முகமாற்றி மன்னர்முகந்தாருமம்மா
கன்னிமுகமாற்றி காளைமுகந்தாருமம்மா
மாதுமுகமாற்றி மன்னர்முகந்தாருமம்மா
பெண்ரூபமாற்றி புருஷர்முகந்தாருமம்மா
என்றுமேயல்லியரே இரங்கியவள்தெண்டனிட்டாள்
மீனாட்சியம்மனன்டை மெல்லியருங்கேட்கலுற்றாள்
அல்லிகையேந்திகேட்கையிலேகனகஞ்சொரிந்திடுமாம்
வாய்திறந்துகேட்கையிலே வச்சிரம்விழுந்திடுமாம்
அப்போதகிலாண்டம் அம்மன்மனந்துலிந்து
சொக்கருடபத்தினியும் தேவிமனமகிழ்ந்து
ஈஸ்வரி அல்லிக்கு ஆண்முகந்தந்தது.
அங்கயற்கண்ணம்மை அகிலாண்டத்தான்பார்த்து
பார்த்தாருச்சுனரைப் பங்கப்படுத்தப்போறாள்
வேந்தரருச்சுனரை வெட்கப்படுத்தப்போறாள்
அவள்-உள்ளங்குளிர்ந்து உடம்பெல்லாம்பூரித்து
அங்கங்குளிர்ந்து அவையவங்கள்பூரித்து
அப்போ-அகிலாண்டஈஸ்பரி அல்லியர்க்கேதுசெய்தா
கன்னிமுகமாற்றி காளைமுகந்தான்கொடுத்தாள்
பெண்ரூபமாற்றி புருஷரூபந்தான்கொடுத்தாள்
மாதுமுகமாற்றி மன்னன்முகங்கொடுத்தாள்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
கண்ணாடிகைப்பிடித்துக் கன்னிமுகம்பார்க்கலுற்றாள்
கண்ணாடிக்குள்ளாகக் கமலமுகந்தோன்றுகுது
பார்த்தால்பிராயம் பதினாறாய்த்தோன்றுகுது
என்னபிராயமிருபதாந்தோன்றுது
துடிகடென்றமீசையில்லை சுரைக்கருங்குழலும்
சோலைக்கிளிராகமாந்துளிர்போல்சூரியனும்
மீசைகட்டும்பாவனையும் முழியில்கறுப்பழகும்
மேற்புறவாண்டுமே வேப்பிலைச்சாயலைப்போல்
எட்டிநடந்தாள் எதிரொலித்துச்சூரியன்போல்
அல்லிராசாணி கூத்துகட்டிக்கொண்டது.
விசிநடந்தாளே வெண்பூர்ணச்சந்திரன்போல்
வழாநிலையும் எழுநிலையின்மேலேறி

மேலாங்கதனை விடுகதனைத்தாள்திறந்து
பலகணிவாசல் திறந்தந்தப்பைங்கிளியும்
காசிபடிமிதித்துக் கன்னியிளங்கொடியும்
தூக்கிவைக்குங்கால்களுக்கு துத்திப்பூச்சல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
தட்டிவரிந்துகட்டித் தாமரைப்பூச்சுங்குவிட்டு
காங்குகச்சையொட்டியாணம் கன்னிவரிந்துகட்டி
கொட்டைவாள்கட்டிச் சொருகுவாள்கைபிடித்து
இலையாயுதஞ்சந்திராயுதம் ஏற்றதோராயுதமும்
பதினெட்டுஆயுதமும் படைமுகமுஞ்சேவகமும்
ஆயுதங்கள்கட்டியல்லோ அல்லியவள்வாராளே

## முடுகு.

முத்தோடேமுத்து மதிமுகமும்
முன்கையாழி மோதிரமும்
சித்திரமெழுதிய குண்டலமும்
திண்டோளழகுஞ் சேவகமும்
நடக்குஞ்சிலசில பாவனையும்
நன்னகைமிஞ்சிய உருமாலைகட்டியஉடையழகும்
உருட்டிவிருக்கும் விழியழகும்
வண்டார்குழலாள் மதிமுகமும்
மகுடமுடிமேற் குல்லாவும்
அரசிலைதொங்குஞ் சிராவும்
ஆபரணங்கள் கலகலென்ன
காலிற்சிலம்பு கலகலென்ன
கண்டாங்கிமோதிரம் வடமசைய
மார்பிற்பவளந் தோளசைய
வச்சிரமாணிக்கம் வடமசைய
கடுக்கனரைஞாண் புனைந்தழகும்
கனத்தகாதிற் குண்டலமும்
மிதியடிகாலில் முனைணிந்து
மெல்லியதுப்பட்டி மேலிறுக்கி
கமலமுரத்திற் றிருநீரும்
கஸ்தூரிப்பொட்டின் மேலழகும்
இரண்டுஸ்தனமுந் தெரியாமல்
இரத்தினசாலுவை வரிந்துகட்டி

வாரான்வாரான் வித்வானென்று
வாத்தியம்பலபல தான்முழங்க
எக்காளசின்னம் பலமுழங்க
எடுத்தநாக சாமுத
கவிராஜபுலவர் வாராரென்று
கட்டியங்களார்ப்பரிக்க

வேறு.

சொட்டைவாள்கட்டிச் சொருகுவாள்கைப்பிடித்து
இலையாயுதஞ்சந்திராயுதம் ஏற்றதோராயுதமும்
பதினெட்டுஆயுதமும் பக்கத்திற்முன்சொருகி
உடுக்கெடுத்துகைப்பிடித்தாள் ஊராளும்ராஜகன்னி
ஐந்துவிரலா லடிக்குமுடுக்கோசை
பத்துவிரலாற் பதித்தாளுடுக்கோசை

முடுகு.

ஆண்டென்றும்பேரென்றும் அடிக்குமொருதாளம்
ஆதாளம்பாதாள மென்னுமுடுக்கோசை
ஆலவாய்ச்சொக்கரை யழைக்குமொருதாளம்
அருச்சுனரெங்கே யவரென்னுமுடுக்கோசை
அங்கையற்கணம்மையை அழைக்குமொருதாளம்
அருச்சுனரதோவந்தா ரென்னுமுடுக்கோசை

வேறு.

அல்லிப்புலவனும் அவ்வீதிதான்தாண்டி
வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
தேரோடும்வீதி தெருவும்பலதாண்டி
தோராவடிவழகி துரௌபதையாள்வீதிவந்தாள்
அடித்தாளேதன் னுடுக்கை யண்டங்கிடுகிடென்ன
உடுக்கையடித்தாளே ஊரெல்லாந்தத்தளிக்க
கையுடுக்கைதானடித்தாள் கண்டார்கள்மெய்மயங்க
தோருவடிவழகி துரௌபதையாள்வாசல்வந்தாள்
வாசற்படிகாக்கும் வாழ்பாண்டிமங்கையர்கள்
ஆர்காணும் நீபுலவா அதிரநடந்துவந்து
ஆளனில்லாவாசலிலே ஐயாவரலாமோ

புருஷரில்லாமாளிகையில் புலவர்வரலாமோ
விளங்கியசீர்மாதவத்துமின்னொளியாள்வாசலிலே
விஜயனாரங்கிருப்பார் வேந்தரேபோய்வாரும்
புண்ணியருமங்கிருப்பார் புலவரேபோய்வாரும்
ஆடும்புலவனுக்கு ஐயாதடையுமுண்டு
பாடும்புலவனுக்கு பார்த்தோர்தடையுமுண்டு
இங்குவாக்கூடாது ஏகிநடவுமென்றான்
அந்தவுரைகேட்டு அரும்புலவனேதுசொல்வான்
ஐம்பத்தாறுதேசம் அடங்கலுஞ்சுற்றிவந்தேன்
பூமிப்பிரதட்சணமாய் போய்வந்தேன்லோகமெல்லாம்
ஆடும்புலவனுக்கு யாதோர்தடையுமில்லை
பாடும்புலவனுக்கு பார்த்தோர்தடையுமில்லை
வித்துவானுக்கும்வேசிகட்கும் வாசற்றடையுமுண்டோ
என்று-கலுக்கென்றுதானகைத்தாள் கமலமுகநாயகியாள்
வாசற்படிகாக்கும் வாழ்பாண்டிமங்கையர்கள் [ள்
நகைத்தநகையாலே நாயகிமார்தானறிந்து
அல்லியிவளென்று அறிந்தார்கள்கண்சாடை
சாடையறிந்துகொண்டு தாதியர்களேதுசொல்வார்
ஆச்சி-ஆரோயிவரை ஆணாய்வளர்த்தார்கள்
ஆணாய்வளர்த்து அரசாளவிட்டார்கள்
பெண்ணாய்வளர்த்துப் புலவனைப்போல்விட்டார்கள்
வித்வானைப்போலே வெளிதனிலேவிட்டாரோ
கானைபோல்வளர்த்து கவிசொல்லவிட்டாரோ
கன்றிற்றேகன்றிற்றே காரிழைக்குகன்றிற்றே
என்றுசொல்லிதாதியர்கள் ஏலங்குழலாட்கு
பூமியைக்கிள்ளிப் பொடியள்ளிக்காப்புமிட்டார்
அப்போதுஅல்லியரும் அரும்புலவன்போல்நடந்து
ஓடமலர்க்கண்ணாளும் உட்கட்டிற்போய்புகுந்து
அடித்தாளேதன்னுடுக்கை யண்டங்கிடுகிடென்ன
அந்த-தோருவடிவழகி துரோபதையுந்தான்பயந்து
ஐயா-விஜயரில்லாவாசலிலே வித்வானும்வந்தாலே
விஜயருங்கண்டாலே வித்யாசமாய் நினைப்பார்
புருஷனில்லாமாளிகையில் புலவரும்வந்தாலே
புருஷனறிந்தாக்கால் பொல்லாங்குநேர்ந்துவிடும்
விஜயனுடவாசலுக்கு வித்வானேபோங்காணும்
அர்ச்சுனனார்வாசலுக்கு ஆணழகாபோங்காணும்

என்றுமவளுரைத்து ஏலப்பசுங்கிளியாள்
வைத்தகண்மாறாமல் வாழ்வாசிபார்த்திருந்தாள்
மாறாமல்பார்ப்பதை மகுடத்துரைச்சிகண்டு
பாராததுபோல பார்த்திருந்தாளல்லியரும்
தோளுவடிவழகி துரோபதையாளப்பொழுது
கலுக்கென்றுநகைத்தாள் கமலப்பூநாயகியும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்பார்த்து
ஆசசி-இப்படிக்குநீநகைத்தால் ஏலப்பசுங்கிளியே
என்-கூத்துக்கலைந்துவிடும் கொம்பனையேயென்னாச்சி
ஆட்டங்கலைந்துவிடும் ஆச்சியரே நீதவிர
அருச்சனன்பெண்டுகளி லாராகிலுஞ்சரியே
எழில்விஜயன்தேவியர்க ளிருக்கின்றநாதியர்கள்
யாராகிலுஞ்சரியே அருச்சுனன்றன்கொலுவில்
பார்த்தனுடகொலுவில் பாடிவரும்போது
அருச்சுனனார்தன்கொலுவி லாடிவரும்போது
என்னைக்கண்டுநகைத்ததொரு கனமுள்ளபெண்டுகளை
பார்த்திபன்றன்கொலுவில் பார்த்துநகைத்தவரை
அவர்-மூக்கையறுத்திடுவேன் மூன்முடியைசங்கரிப்பே
நாக்கையறுத்திடுவேன் தல்விலங்குபோட்டிடுவேன் [ன்
வார்க்காதநீர்வார்த்து வைத்துதலைசிரைப்பேன்
காவாங்கரைதனிலே கழுமரத்திலேற்றிடுவேன்
தாமணிகட்டித் தறித்திடுவேன்பூமுடியை
அப்படியேதானுரைத்தாள் அல்லிமலர்நாயகியும்
அதை-தோளுவடிவழகி துரோபதைநயுதான்கேட்டு
ஆச்சி-மூக்கையும்நியறுப்பாய் முடிமன்னர்சீர்மகளே
நாக்கையும்நியறுப்பாய் ராஜாக்கள்சீர்மகளே
பாண்டியர்கள்பெற்றெடுத்தார் பாடும்புலவனென்றே
ஆச்சியர்கள்பெற்றெடுத்தார் நியாடும்புலவனென்றே
எக்கோலம்வந்தாலும் ஏற்குமேயுந்தனுக்கு
தருமமம்மாவுந்தனுக்குத் தார்விஜயன்பத்தினியே
அதை-பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
கொம்பேருடையாளும் குலுங்கவேதானகைத்து [ள்
பெண்பெருமாளல்லியரும் பொற்கொடிகேதுசொல்வா
சிமந்தப்போறபெண்கள் தேன்மொழிமாரெல்லோரும்
வெளியேபுறப்படுங்கள் மேகத்தருங்கிளிகள்
விளங்கியசீர்மாதவந்து மின்னொளியாள்மாளிகையில்

காண்டாவனமெரித்த காளையருமங்குவந்து
அல்லியெங்கேயென்று அருச்சுனன்கேட்டாக்கால்
பொற்கொடியாளல்லியருக்குப் புதுக்கப்பல்வந்தது
இவள்-யானைகயலாடுகிருள் ஆட்டம்பழகுகிருள்
குதிரைகயலாடுகிருள் கூத்துப்பழகுகிருள்
முத்துவிலைமதித்த முடிபாண்டிசீர்மகளும்
பவளம்விலைமதித்துப் பாவையரும்வாரேனென்ருள்
கணக்கறிந்துவாரேனென்ருள் கட்டழகியல்லியரும்
இப்படிக்குச்சொல்லி யுரையென்ருளாச்சியர்க்கு
தோருவடிவழகி துரோபதையுந்தான்கேட்டு
ஆகட்டும்நல்லதென்று அப்படிக்கேசொல்வமென்ருள்

## அருச்சுனன்தேவிகள் மின்னொளியிடம்வந்தது.

அப்போ-ஸ்ரீமந்தம்போறபெண்கள்தேன்மொழிமாரெல்லோரும், ஒற்றைவெண்சாய்மரமும்ஒளிவீசும்பெண்டுகளும், இரட்டைவெண்சாய்மரமும் இரத்தினம்போற்கன்னிகளும், வெளியிற்புறப்பட்டார்கள் மேகத்தருங்கிளிபோல், தெருவீதிவந்தார்கள் தேன்மொழிமாரெல்லோரும், அவர்கள்வீதியும்வீதி தெருவும்பலதாண்டி
பெருமாளெழுந்தருளும் தெருவீதிதான்கடந்து
சிவனெழுந்தருளும் தெருவீதிதான்கடந்து
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிகளும்
அங்காடிவீதி யநேகந்தெருக்கடந்து
துரும்பசையத்தேன்சொரியும் சோழன்திருமகளைச்
சோற்ருல்மடையடைக்கும் சோழன்திருமடந்தை
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்வீதிவந்தார்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்வாசலிலே
அந்த-வாசற்படிகாக்கும் மயிலணைமார்தாதியர்கள்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்முன்னேவந்து
தோருவடிவழகி துரோபதைநாயகமும்
நாகமடந்தை நறிநுதலாள்நாயகமும்
வண்டார்கருங்குழலாள் வயிரவள்ளிநாயகியும்
பொற்கலசநன்முலையாள் போகவதிநாயகமும்
பங்கயஞ்சீர்கண்ணாளும் பவளக்கொடிநாயகமும்
பார்ப்பான்மகளும் பரிவுடையபத்தினியும்
வருகிருரென்றுமே மாதுமனமகிழ்ந்து

மின்னொளியாப்போது மெல்லியர்க்கேதுசொல்வாள்
பக்கத்தில்வீற்றிருக்கும் பாங்கியுரைத்தாளழைத்து
ஆலாத்திசுற்றுங்கடி யருச்சுனனார்தேவிகட்கு
காயக்கருங்குழலாள் தாதியருந்தான்கேட்டு
சொல்லப்பெற்றோமென்று சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லிகும்பிட்டெழுந்திருந்து
முத்தினாலாலாத்தி யிட்டார்வெகுவிதமாய்
பவளத்தாலாலாத்தி பத்தினிமார்சுற்றினார்கள்
கற்பூரஆலாத்தி காட்டினார்காரிகைமார்
செஞ்சோறும்வெண்சோறுஞ் சுழற்றியெறிந்தார்கள்
சுண்ணப்புரஞ்சனுஞ் சுற்றியவரெறிந்தார்
திருஷ்டிகழிந்து தெருவிலெறிந்தார்கள்
ஆலாத்திகாட்டி யணியிழைமார் நீங்கியபின்
அருச்சுனன்றேவிகளும் அருகிருக்குமாதர்களும்
ஓடமலாக்கண்ணார்கள் உட்கட்டிற்போய்ப்புகுந்து
மாதர்களெல்லோரு மாளிகையில்வந்தபின்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியுந்தானெழுந்து
இருகையிலும்பூவெடுத்து ஏந்திழையாளிடைதுவள
ஆடையிடைதுவள ஆபரணஞ்சோதிமின்ன
சேலையிடைதுவள சென்னபின்னல்தானசைய
பட்டுஇடைதுவள பாடகக்கால்சத்தமிட
முத்துமொளமொளென்ன மோதிரக்கால்சோதிமின்ன
பூவேந்திமின்னொளியும் பெண்கள்சபைதனிலே
சுற்றியெங்கும்பார்த்தாளே சுந்தரியைக்காணமல்
பக்கமெங்கும்பார்த்தாளே பாவையரைக்காணமல்
தோருவடிவழகி துரோபதையாள்முன்னேவந்து
பன்னீரார்காலலம்பிப் பட்டாலடிதுவட்டி
கொண்டுவந்தபூமல்லைக் குபுகுபென்றுதான்சொரிந்து
மூக்கால்வலம்வந்து முடிவணங்கிமின்னொளியும்
காண்கிறேனாச்சியென்று கால்மேல்முடிசாய்த்தாள்
வணங்குகிறேனாச்சியென்று மாதுமுடிசாய்த்தாள்
தோருவடிவழகி துரோபதையுந்தான்பார்த்து
வந்துபணிந்தவளைக் கண்டுமனமகிழ்ந்து
வாரியெடுத்து மடிமேலேகொண்டணைத்து
வாழ்வீர்வளர்ந்திடுவீர் வர்த்திப்பிருந்திப்பீர்

நிற்பீர் நிலைபெறுவீர் நீடூழிவாழ்ந்திருப்பீர்
பெருமாளருளாலே புதல்வரைப்பெற்றிடுவீர்
மலைராமர்தன்னருளால் மைந்தர்களைப்பெற்றிடுவீர்
வாழ்வீர்காணென்று மனங்குளிரவாழ்த்தினாள்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியும்போது
தாமக்குழலாளைத் தாதியரைத்தானழைத்து
தேன்மொழியாள்வீற்றிருக்கசிம்மாதனம்போடுமென்று
தாதியவள்கேட்டுத் தானெழுந்துசீக்கிரமாய் [ள்,
சொல்லப்பெற்றோமென்று சுருக்காயெழுந்திருந்து
கூறப்பெற்றோமென்றுசொல்லிக்கும்பிட்டெழுந்திருந்து
சிம்மாதனமும்விட்டு வெண்போலதுகில்மடித்தாள்
இட்டதோராசனத்திலேறியவள்வீற்றிருந்தாள்
மற்றுமுள்ளபெண்களுக்கு வண்ணத்தடுக்குமிட்டார்
இட்டதடுக்கின்மேல் ஏந்திழைமார்வீற்றிருந்தாள்
வாடாயிலைச்சுருளும் வன்னத்துவர்பாக்கும்
கோர்வையிலைச்சுருளுங் கொத்துத்துவர்பாக்கும்
வைத்துக்கொடுத்தாள் மதிக்குமந்தவாசகத்தை
வந்தமுகவாசகத்தைத் தின்றவரும்வீற்றிருந்தார்
தோருவடிவழகி துரோபதையைத்தான்பார்த்து
மேகம்பயின்றெடுத்த மின்னொளியுமேதுசொல்வாள்
ஆச்சி-மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம் [ள்
மதுரையுன்பத்தாறுகாதம் ஆண்டிருந்தார்பாண்டியர்க
மைந்தருமில்லையென்று மலைமேற்றவமிருந்தார்
மாளுகிறோமென்று மலைமேற்றவமிருந்தார்
எட்டுநாளொருவாரம் பெய்தமழைதனிலே
தெப்பலாய்த்தான்மிதந்தார் தேனின்குழலாட்கு
ஆடுமேய்க்குமிடையரெல்லா அண்டநிழலென்றிருந்
தார், மாடுமேய்க்குமிடையரெல்லா மரமிதென்றுபொங்
கிரிண்பார், மாளாதீரென்று மலரிலவதரித்தாள்
சொக்கரருளாலே தோகையரும்பெண்பிறந்தாள்
அம்மனருளாலே அல்லியிலேபெண்பிறந்தாள்
ஓராம்பிராயத்திலே ஒற்றைவாளேந்திருந்தாள்
இரண்டாம்பிராயத்திலே யிரணைவேலைவாசித்தாள்
மூன்றாம்பிராயத்திலே முத்துமுடிதரித்தாள்
நான்காம்பிராயத்திலே ராச்சியத்தையாண்டிருந்தாள்

ஐந்தாம்பிராயத்திலே அவனிமுழுதாண்டிருந்தாள்
ஆறும்பிராயத்திலே ஆனையின்மேலேறிநின்றாள்
ஏழாம்பிராயத்திலே எதிர்த்துவந்த நின்முகனை
பற்றிமயிருழுத்துப் பாடகத்தின்கீழழுத்தி
எத்தியுடலமிளந்து செங்கோல் நிலைநிறுத்தி
கொம்பிலேரத்தங் குருவிப்பாலுண்டதைப்போல்
பெண்பெருமானென்று தருபிடித்தாலொருவி
அப்படிப்பட்டதொரு ஆச்சியருமெங்கேயென்றாள்
தோருவடிவழகி துரோபதையுந்தான்கேட்டு
இருமிருமென்றுசொல்லி ஏலங்கருங்குழலும்
கண்சாடைகாட்டினாள் கமலப்பூநாயகியாள்

## அருச்சுனன் பெண்கள்சபைக்குவருதல்.

ஆறுலழகுமன்னன் அருச்சுனராசாவும்
வாரார்தருமர்தம்பி வடக்கெழுந்தசூரியன்போல்
அவர்-கைவிசும்பாவனையும் காலையுடபின்னழகும்
மிசைமுருக்கழகும் விழியில்கறுப்பழகும்
பெண்டுகள்பந்தியிலே போர்விஜயன்வந்துநின்று
அடி-வந்திரேமாதர்களே வாங்களிருங்களென்று
மற்றுஞ்சிலபெண்டுகளை வாங்களிருங்களென்று
தோருவடிவழகி துரோபதையைத்தான்பார்த்து
மேல்மதுரைக்கீழ்மதுரை மேன்மையுடன்தாளுண்டார்
ஊராளும்ராஜகன்னி யுங்கள்துரையெங்கேயென்றார்
தோருவடிவழகிதுரோபதையுமேதுசொல்வாள்
எங்கள்துரையென்கிறதை யின்னுளறியீரோ
இராச்சியங்கள்தானறியும் நன்மதுரையாள்கிறது
வையகங்கள்தானறியும் வாள்மதுரையாள்கிறது
தேசங்கள்தானறியும் தென்மதுரையாள்கிறது
பூமியுள்ளோர்தானறிவார் பொன்மதுரையாள்கிறது
எனக்குந்தெரியவரும் உத்தமனார்சீமானே
ஓடமலர்கண்ணுட்குப் புதுக்கப்பல்வந்தது
யானைகயலாடுகிறாள் ஆட்டம்பழகுகிறாள்
யானைவிலைமதித்து வருவாள்காணாணங்கு
குதிரைகயலாடுகிறாள் கூத்துபழகுகிறாள்
குதிரைவிலைமதித்து வருவாள்காண்கொம்பனையாள்

ஒட்டைகயலாடுகிற ளோட்டம்பழகுகிருள்
ஒட்டைவிலைமதித்து வருவாள்காணுத்தமியும்
பட்டுப்படுந்துறையில் பத்துலட்சம்வந்திருக்கும்
பட்டுவிலைமதித்து வருவாளேபைங்கிளியும்
முத்துப்படுந்துறையில் மூன்றுலட்சம்வந்திருக்கும்
முத்துவிலைமதித்து வருவாளேமெல்லியரும்
என்றுமவளுரைத்தா ளேலம்பசுங்கிளியாள்
ஆடுமயிற்சாய லருச்சுனருந்தான்கேட்டு
மன்னன்மனஞ்சலித்து மாதாகளுக்கேதுசொல்வான்
சூரியனில்லாத சோலையிருளாச்சே
சந்திரனில்லாத சாலைபழுதாச்சே
நட்டுவனில்லாத நாடகசாலையிது
வித்துவானில்லாத மேன்மக்கள் கூட்டமிது
ஆரில்லாவூர்போ லரசனில்லாபட்டணம்போல்
விளக்கில்லாகூடம்போல் வேந்தனில்லாநற்சபைபோல்
அல்லியவளில்லாத அருஞ்சபையும்பாழாச்சே
பெண்பெருமாளில்லாத பெண்கள்சபைபாழாச்சே
அல்லியில்லாக்கூடம் அழகாயிருக்கவில்லை
செல்வியில்லாக்கூடஞ் சிறப்பாயிருக்கவில்லை
சீச்சீச்சிமண்டபமே சீழிந்தமண்டபமே
போபோமண்டபமே போக்கழிந்தமண்டபமே
என்று-வேந்தருச்சுனரும் விசனமாய்வீற்றிருந்தார்
மன்னர்மனஞ்சலித்து மருமமாய்தானிருந்தார்
இப்படியாக இவரிருக்கும்வேளையிலே
அப்போதுஅல்லியரும் அங்ஙனமேவதுசெய்தாள்

## அல்லி மின்னொளியிடம் வந்தது.

வாராளேஅல்லியரும் வடக்கெழுந்தசூரியன்போல்
தெருவீதிவாராளே தெற்கெழுந்தசூரியன்போல்
துரௌபதையாள்வீதிவிட்டுத் துன்னிலங்கண்ணாளும்
மற்றுமொருவீதியிலே வாராளேமாதுகன்னி
அவ்வீதிதன்னி லடித்தாளுடுக்கோசை
அடித்தாளேதன்னுடுக்கை அண்டங்கிடுகிடென்ன
எடுத்தாளேதன்னுடுக்கை ஏழுலகந்தத்தளிக்க
அவ்வீதிதன்னில்வாழும் அரசர்துரைகளெல்லாம்
உடுக்கோசைகேட்டவர்கள் திடுக்கிட்டெழுந்திருந்து

இந்தவுடிக்கோனை பெவ்வுலகிற்கண்டதில்லை
தெய்வவுடிக்கோனை தெருவில்முழங்குதென்று
வந்துவந்துபார்த்தார்கள் மகுடமுடிமன்னரெல்லாம்
புலவனைக்கண்டவர்கள் பூமுடிசோர்ந்துவிட்டார்
வித்வானைக்கண்டவர்கள் வேர்த்துவிலவிலத்தார்
கவிஞனைக்கண்டவர்கள் கண்கள்முகஞ்சோர்ந்தார்
பாடகனைக்கண்டவர்கள் பலமில்லாக்கொம்பானார்
இன்னஞ்சிலபேர்கள் எதுரைப்பாரங்கிருந்து
மற்றுஞ்சிலபேர்கள் மன்னவனுக்கேதுசொல்வார்
ஓகோபுலவா நீ யொளித்திருந்தவாழ்மார்பா
ஆஆபுலவா நீ ஆனந்தவாழ்மார்பா
எந்தெந்ததாரமெல்லாம் இந்திரரேயுந்தனுக்கு
சொந்தஎங்கள்தாரமெல்லாம் சுந்தரரேயுந்தனுக்கு
எங்கள்-ஆஸ்தி அடங்கலமு மத்தனேயுந்தான்கொடுப்
சற்றேதிநேரம் தரியாய்புலவா நீ                [போம்
நிமிஷமரைநாழி நிற்கரய்புலவா நீ          [கின்றோம்
உனக்கு-அடப்பம்பிடிக்கின்றோம் ஆனதொழில்செய்
குதிரைவிடுகின்றோம் கொற்றவனேயுந்தனுக்கு
யானைதருகின்றோம் ஆணழகாயுந்தனுக்கு
சற்றேநீநேரந் தரியாய்புலவா நீ
நிமிஷமரைநாழி நில்லுய்புலவா நீ
என்றுமிவருரைத்து இருக்கின்றவேளையிலே
கிழங்கள்பழங்களெல்லாங் கிட்டிநின்றுபார்த்திருக்க
வக்கத்தாப்போல யாவரும்நின்றிருக்க
பிறவாமுடிதரித்த பெண்பெருமான்தான்பார்த்து
புலவனைப்போல்வாய்திறந்து பொற்கொடியுமேதுசொ
ல்வாள், வித்வானைப்போல்வாய்திறந்து மெல்லியருமே
துசொல்வாள், ஐயா-காளையருச்சுனரைக்கண்டுநெடுநா
ளாச்சு, காளையருச்சுனரைக் கண்டுதிருப்புகிறேன்
பார்த்தருச்சுனரைப் பார்த்துநெடுநாளாச்சு
பார்த்துத்திரும்புகிறேன் பார்த்தருச்சுனரை.
போய்வாரேனையாவென்று புலவனுந்தானடந்தான்
அவ்வீதிவீதி தெருவெப்பலதாண்டி
மற்றுமொருவீதியிலே வித்வானும்போய்நுழைந்து
எடுத்தாளேசிற்றுடிக்கை யேழுலகந்தத்தளிக்க
அவ்வீதிவாழும் அரிவையர்தான்கேட்டு

அவ்வீதிவாழும் அணியிழைமார்தான்கேட்டு
இந்தவுடுக்கோசை யெங்கிலுங்கண்டதில்லை
பரமருடுக்கோசை பாருலகிற்கண்டதில்லை
என்றுமவரெழுந்தா ரேந்திழைமாரெல்லோரும்
அவர்கள்-ஏழாம்நிலையும் எழுநிலையின்மேலேறி
மேலாங்கதவை விடுகதவைத்தாள்திறந்து
பலகணிவாசல் திறந்தந்தபத்தினிமார்
பாடும்புலவனைப் பைங்கிளிமார்கேட்கலுற்றார்
ஆடும்புலவனை அணியிழைமார்பார்க்கலுற்றார்
புலவனைக்கண்டவர்கள் பூமுடிசோர்ந்துவிட்டார்
வித்வானைக்கண்டவர்கள் வியர்த்துவிலவிலத்தார்
கவிஞனைக்கண்டவர்கள் கன்னிமயலானார்கள்
பாட்டகனைக்கண்டதொரு பாவைமயலானார்கள்
ஓகோபுலவா நீ யொளித்திருந்தவாழ்மார்பா
ஆஆபுலவா நீ ஆனந்தவாழ்மார்பா
சற்றுநேரம் தரிக்காய்புலவா நீ
நிமிஷமரைநாழி நிற்காய்புலவா நீ
சற்றேயரைநாழி தரித்ததேயாமாகில்
உந்தனைப்போலவொரு மைந்தனைப்பெற்றெடுப்போம்
நிமிஷமரைநாழி நின்றுயேயாமானால்
பாட்டகனைப்போலவொரு பாலனைப்பெற்றெடுப்போம்
இன்னமரைநாழி யிருப்பாயேயாமானால்
விசுவாசம்போலவொரு சிசுபாலனைப்பெறுவோம்
இப்படியாய்ச்சொல்லி ஏமார்ந்தார்பெண்களெல்லாம்
பிசறியெடுத்துக் கசக்கிப்பிழிந்தாப்போல்
பத்தினிமாரெல்லோரும் பட்டுமிகச்சோர்ந்தார்கள்
கன்னிமாரெல்லோருங் களையாற்சோர்ந்துவிட்டார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாள்தான்பார்த்து
சிவசிவாவென்று செவிதனிலேகையைவைத்து
அரகராவென்று ஆரணங்குபோய்நடந்தாள்
அவ்வீதிவீதி தெருவம்பலந்தாண்டி
ஆனைவிலைமதிக்கும் அணிமன்னர்வீதிவந்தார்
அவ்வீதிவாழும் அரசமன்னரெல்லோரும்
வித்வானைப்பார்த்து வேந்தர்மயங்கிநின்றார்
புலவனைப்பார்த்துப் பேர்மன்னர்தான்மயங்கி

இப்படிப்பட்ட புலவனிருப்பானே
இந்த-வாழும்புலவனைபோல வையகத்திற்கண்டதில்லை
என்றுமவர் நினைந்து ஏதுசொல்வார்புலவனண்டை
வாரும்புலவா நீவன்னமணிமாளிகைக்கு[தொடுப்போம்
உமக்கு-வேண்டும்பணிகள்செய்வோம்விதவிதமாய்ப்பூத்
கோரும்பணிகள்செய்வோம் குறித்ததெல்லாந்தந்திடு
வோம், ஆணாய்பிறந்தவர்கள் அடப்பங்கள்தாங்கிநிற்
போம், பெண்ணாய்ப்பிறந்தவர்கள் பின்பணிகள்செய்து
வைப்போம், வாரும்புலவாவென்று வருந்தினார்மன்ன
ரெல்லாம், நீர்-கால்வைத்திராமலுல்கனகஞ்சொரிந்து
விடும், பாதம்வைத்திராமானல் பாக்கியம்பெற்றிடுவோ
இருங்காண்புலவாவென்று யாவர்களுஞ்சொல்லுகின்று
அப்போதுவாழ்புலவன் யவர்களுக்கேதுசொல்வான்[ர்
காண்டாவனமெரித்த காளையருச்சுனரும்
கண்டுவெகுநாளாச்சு கண்டுதிரும்புகிறேன்
பாசுபதம்பேறுபெற்ற பார்த்தருச்சுனரை
பார்த்துவெகுநாளாச்சு பார்த்துத்திரும்புகிறேன்
மன்னன்கொலுவைக்கண்டு மறுத்துவருகிறேன்
தேர்விஜயன்கொலுவைக்கண்டு திரும்பிவருகின்றேன்
நான்வாரேனென்றுசொல்லி நடந்தான்புலவனுமே
அவ்வீதிதாண்டி மறுவீதிதானடந்து
குதிரைவிலைமதிக்குங் கொற்றவர்கள்வீதிவந்தான்
அந்தநல்லவீதியிலே வாழ்கின்றமன்னரெல்லாம்
புலவனைக்கண்டவர்கள் பிரமித்துநின்றுவிட்டார்
வித்வானைக்கண்டவர்கள் விழிசோர்ந்துநின்றுவிட்டார்
ஒருவர்க்கொருவ ருவமையுடனேதுசொல்வார்
நான்-ஐம்பத்தாறுதேச மடங்கலுஞ்சுற்றிவந்தேன்
சீமையெழுகடலும் சிறப்பாகச்சுற்றிவந்தேன்
இந்தப்புலவனைப்போ லெங்கிலுங்கண்டதில்லை
வாழும்புலவனைப்போல வையகத்திற்கண்டதில்லை
பார்த்தால்பிராயம் பதினாறாய்த்தோணுகுது
என்றைப்பிராய மிருபதுந்தோணுகுது
முத்துநிகர்பல்லும் முருக்கனிந்தசெவ்வாயும்
நெற்றிதிலக்கிட்ட நிலவிழிசோதிமின்ன
மேற்புருவமிரண்டழகும் வேப்பிலைச்சாயலைப்போல்

காளைதிருமுகத்திற் கஸ்தூரிப்பொட்டழகும்
குரலோசையானதுதான் கோகிலத்தைமாற்றடிக்கும்
பாடுங்குரலோசை பரமனுக்கேயொப்பிடலாம்
என்றுமேசொல்லி யிருந்தாரிவர்களெல்லாம்
அப்போதுவாழ்புலவன் அந்தநல்லவீதிவிட்டு
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்வீதிவந்தான்
வாழ்புழவனைப்போல வாசித்தாள்தன்னுடுக்கை
அரும்புலவனைப்போ லடித்தாளேசிற்றுடுக்கை
அடித்தாளேதன்னுடுக்கை யண்டங்கிடுகிடென்ன
எடுத்தாளேதன்னுடுக்கை யேழுலோகந்தத்தளிக்க
அடித்தவுடுக்கோசை யங்கிருப்போராதான்கேட்டு
வாசற்படிகாக்கும் வாழ்பாண்டிமங்கையர்கள்
காவலிருக்கின்ற கன்னியர்களேதுசொல்வார்
ஆர்காணும்புலவா நீ அதிரவேயிங்குவந்தாய்
எவர்காணும்புலவா நீ யிங்கேவந்தகதையேது
வந்தவகையதனை வாய்திறந்துசொல்லுமென்றார்
இங்கேவந்ததேதுகவை யெனக்கறியசொல்லுமென்றார்
அப்போதுவாழ்புலவ னரிவையருக்கேதுசொல்வான்
காளையருச்சுனனைக் காணமனமுமுண்டு
காணமனமுமுண்டு கவியுஞ்சிலபாடவந்தேன்
பார்த்தருச்சுனனைப் பார்க்கமனமுமுண்டு
பாடமனமுமுண்டு பாட்டுஞ்சிலபாடவந்தேன்
பாட்டுஞ்சிலபாடியல்லோ பரிசுபெறயிங்குவந்தேன்
கவியுஞ்சிலபாடி கனகம்பெறவேண்டிவந்தேன்
கொம்பேருச்சுனர்முன் கூத்துகளாடவந்தேன்
கூத்துஞ்சிலதாடி கொடுப்பதைவாங்கவந்தேன்
போகச்சிலவருளும் பொற்கொடியேயென்றுரைத்தான்
அப்போதுதாதியர்கள் அரும்புலவர்க்கேதுரைப்பார்
ஆடும்புலவருக்கு ஐயாதடையுமுண்டு
பாடும்புலவருக்குப் பார்த்தர்தடையுமுண்டு
போகாதேபோகாதே போனூற்பழுதுவரும்
செல்லாதேசெல்லாதே சென்றாலேதீங்குவரும்
நில்லுமேயென்றார்கள் நீலங்கருங்குழல்மார்
வாழ்புலவன்றான்கேட்டு மறுவார்த்தையேதுசொல்வா
ஆஆ-ஆடும்புலவனுக்கு ஆச்சிதடையுமுண்டோ

பாடிப்புலவனுக்கு பார்த்தர்தடையுமுண்டோ
வித்[illegible]னுக்கும்வேசிகட்கும் விஜயர்தடையுமுண்டோ
என்றுமேயபற்கடித்து இருவிழியுந்தான்ததும்பி
கந்திசுழற்றியல்லோ காரிகையுமுட்புகுந்து
கந்திசுழற்றலுமே காதவழியோடிவிட்டார்
பாலாசுழற்றலுமே பதிங்காதமோடிவிட்டார்
கால்நடுங்கிகைநடுங்கி கனத்தவிழிபிதுங்கி
நெஞ்சுலர்ந்துநாவரண்டு நின்றுவிட்டார்தாதியர்கள்
அத்தச்சமயம் அதுவேளைதான்பார்த்து
இதுதான்சமயமென்று எழுந்துநடந்தாளாம்
ஒட்டமயிர்க்கன்னுமும் உட்கட்டிற்போய்புகுந்து
அடித்தாளேதன்னுடுக்கை யண்டங்கிடுகிடென்ன
எடுத்தாளேதன்னுடுக்கை யேழுலோகந்தத்தளிக்க
பிடித்தாளேதன்னுடுக்கை பூலோகம்நெக்குவிட
அப்போதொருவடிவைகிதுரோபதையுந்தான்பார்த்து
அடி-வந்தாளேவந்தாளே ம்குட முடியல்லியரும்
இங்கிருந்தோமானுக்கா லினிநமக்குமோசமுண்டு
அனைவருமொன்றாகி யரிவைமார்தானெழுந்து
எழாம் நிலையும் எழு நிலையின்மேலேறி
மேலாங்கதவை விடுகநவைத்தாள்திறந்து
பல்கணிவாசல் திறந்தந்தபைங்கிளிமார்
உண்டானபெண்களெல்லா மொருபக்கம்விற்றிருந்தார்

## அல்லி அர்ச்சுனனிடம்வந்து கூத்தாடுதல்.

அல்லிப்பெருமாளும் ஆரணங்குமப்போது
காண்டாவனமெரித்த காளையெதிரில்வந்தாள்
சாலையிலேசூரியனைச் சாய்த்துப்பிடித்தாப்போல்
சோலையிலேசந்திரனைச் சூழ்ந்துகவித்தாப்போல்
வானத்து அம்புலியை வாவென்றழைத்தாப்போல்
மேகத்துஅம்புலியை மிரட்டிப்பிடித்தாப்போல்
போருக்குபோவாரை போவென்றுரைத்தாப்போல்
வாதுக்குவருவாரை வாவென்றழைத்தாப்போல்
சண்டைமிடுவாரை சாடியடித்தாப்போல்
மற்பொருந்தஞ்செய்வாரை மடிபிடித்நிறுத்தாப்போல்
அடித்தாளேதன்னுடுக்கை யண்டங்கிடுகிடென்ன

படித்தாளேதன் னுடுக்கை பரமன்செவிகேட்க
எடுத்தாளேதன் னுடுக்கை யேழுலோகந்தத்தளிக்க
ஐந்துவிரலா லடிக்குமுடுக்கோசை

முடுகு.

அண்டென்றும்பேரென்று மென்னுமொருதாளம்
ஆதாளம்பாதாள மென்னுமுடுக்கோசை
ஆவலாய்ச்சொக்கரை யழைக்குமொருதாளம்
அங்கையற்கண்ணம்மையற்கு மென்னுமுடுக்கோசை
அர்ச்சுனரை நாடி யழைக்குமொருதாளம்
அநேகவந்தாருச்சுனனு ரென்னுமுடுக்கோசை
எழில்விஜயனெங்கேயெங்கே யென்னுமொருதாளம்
இங்கிருப்பாருச்சுனனு ரென்னுமுடுக்கோசை
உடுக்கைப்படிக்கிறதும் உருட்டிவிழிக்கிறதும்
நயனங்களுருளுவதும் லாடகவிபாடுறதும்
தமரமடிக்கிறதும் சக்கரங்கள்சுற்றுவதும்
கத்திசுழற்றுவதுங் கரணங்கள்போடுவதும்
பாலாசுழற்றுவதும் பாட்டுகள்பாடுவதும்
ஈட்டிசுழற்றுவதும் எக்களித்துப்பேசுவதும்
அத்தனைபேரையும் பொறும்பொறுமென்று
ஆகாவென்று அன்புடனேகையமர்த்தி
கத்திசுழற்றியல்லியரும் கவியொன்றுசொல்லுகிருள்

வேறு.

அத்திபுறத்துக் கதிபதியே
அண்டமளந்தார் மைத்துனரே
குற்றமில்லாமல் நீர்வாழும்
குந்திகுமாரா சேவகனே
அண்டைமாயிர மந்தணர்க்கு
அடிகள்வணங்கி யுபசரிப்பீர்
சற்றுந்தளராத் தனஞ்சயனே
தியாகங்கொடுக்கும் வாழ்மார்பா
மகாராஜராஜனே மண்டலவுத்தாரனே
ஜெகதலப்பிரக்கியாதனே சிமையனுகூலனே
குந்திகுமாரா கோவிந்தன்மைத்துனு

இடைசமிமனைவாளா யெங்களுக்குத்தோழா
இராஜாதிராஜனே இராஜேந்திரமைந்தனே
தேவாதிதேவனே தேவசிகாமணியே
சற்குணதானஞ் சமா சகலகுணமயில்வரா
சுவாமியாக்கென்று போடுவாளாகுதன்னே

## அல்லி அர்ச்சுனனை தியாகங்கேட்டது,

குதிரைதிருநாதி தந்தனுப்பவேண்டும்
கொற்றவனுந்தனை நான் கொண்டாடவேணும்
ஆனைதிருநாடகனைத் தந்தனுப்பவேணும்
அர்ச்சுனனுந்தனை நானாதரிக்கவேணும் [ருமையா
உன்-ஆலயத்துப்பெண்களிலே இரண்டுபெண்களைத்தா
போடுமையாதியாகமென்று போடுவாளாகுதன்னே
உன்-மண்டபத்துப்பெண்களிலே இரண்டுமாதர்களைத்
தாருமையா,கொடுமையாதியாகமென்று குந்தியெழுந்தி
ருப்பாள், பாண்டுராஜன்புத்திரனே பாருலகமாண்டவ
னே, பத்தினியானபெண்களிலே பார்த்தாளனக்குதந்த
ருளும், எனக்குதியாகந்தந்தாலே யீரேழுலகுங்கீர்த்தியு
ண்டு, போடுமையாதியாகமென்றுபோடுவாளாகுதன்னே

## வேறு.

ஆறைவழகுமன்னன் அர்ச்சனவீரியனும்
காண்டாவனமெரித்த காளையவர்பார்த்து
நெஞ்சுலர்ந்துவாயுலர்ந்து நித்திலப்பூமுடியான்
பச்சைமுகங்கருகிப் பார்த்தன்முகம்வேறுபட்டு
சிந்தைகலங்கித் திடுக்கிட்டுமெய்கலங்கி
சிற்றுடம்புவேர்த்து சிறுகண்சிவப்பேறி
சொல்மாற்றிச்சொல்லுரைப்பார் சுந்தரப்பூமுடியார்
வாரபுலவர்சிலர் வாகனங்கள்கேட்பார்கள்
பாடும்புலவர்சிலர் பாக்கியங்கள்கேட்பார்கள்
ஆடும்புலவர்சிலர் ஆஸ்தானங்கேட்பார்கள்
பணங்கள்தான்கேட்பார்கள் பாக்கியந்தான்கேட்பார்
பெண்டுகளைக்கேட்கின்ற புலவரைநானறியேன்
மாதர்களைக்கேட்கின்ற மன்னர்களைநானறியேன்
கன்னிகளைக்கேட்கின்ற காளைகளைநானறியேன்
என்றுஅர்ச்சுனனும் எழுந்திருந்துசீக்கிரமாய்

துரோபதையைக்கேட்போமென்று தேர்விஜயன்போக
வழாநிலையும் எழுநிலையின்மேலேறி [லுற்றான்
துன்னிலங்கண்ணனுந் துரோபதையாமுன்னேவந்து
அடி-பாவையிளங்கொடியே பாஞ்சாலன்சீர்மகளே
அனலிற்பிறந்தவளே அபிஷேகபத்தினியே
தீயிற்பிறந்தவளே தென்னுடன்பாவையரே
வாரபுலவரெல்லாம் வாகனங்கள்கேட்பார்கள்
ஆடும்புலவரெல்லாம் ஆஸ்தானங்கேட்பார்கள்
வித்வான்கள்வந்தாலே வஸ்திரங்கள்கேட்பார்கள்
பணங்களைக்கேட்பார்கள் பாக்கியங்கள்கேட்பார்கள்
பெண்களைக்கேட்கின்ற புலவரைநானறியேன்
கன்னிகளைக்கேட்கின்ற காளைகளை நானறியேன்
மாதர்களைக்கேட்கின்ற மன்னர்களை நானறியேன்
எனக்கொன்றுந்தோன்றவில்லை இளங்கொடியேசொல்
லுமென்றார், தோருவடிவழகி துரோபதையுமேதுசொ
ல்வாள், புலவனுடவாயாலே பொல்லாங்குமாகாது
வித்வான்வாக்காலே விஷச்சொல்லுமாகாது
கூத்தாடிவாயாலே கோட்சொல்லுமாகாது
அவன்கேட்டதைநீர்கொடுத்து கீர்த்திபண்ணிபோகவி
நினைத்ததைநீர்கொடுத்து நிமிஷத்திற்போகவிடும்[டும்
என்றதுதான்கேட்டு ஏதுசொல்வாரருச்சுனரும்
அடி-அனலிற்பிறந்தபெண்ணே அபிஷேகபத்தினியே
பெண்களைநான்கொடுத்தால்பூலோகத்தாரென்னசொல்
வார், மாதர்களைநான்கொடுத்தால் மண்டலத்தாரேது
சொல்வார், தேவிகளைநான்கொடுத்தால் தேசத்தாரென்
னசொல்வார், என்னுடைத்தராஜாக்க ளேசிநகையாரா
சரியொத்தராஜாக்கள் சற்றேநகையாரா
இந்தப்புதுமைகளை யிதுநெடுநாள்கண்டதில்லை
இப்படியாய்ச்சொல்லி யிவரிருக்கும்வேளையிலே
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்

முடுகு.

கொண்டாட்டமாடுவாள் குதிப்பாள்குலுங்கிநிற்பாள்
அஞ்சாறுகத்தியை அவள்சுழற்றித்தானெறிந்து
தரையில்விழவொட்டாமல் தானேந்திவாங்கிடுவாள்
சற்குணாயீஸ்வரா சகலகுணதனஞ்சயா
சுவாமிபாராக்கென்று போடுவாளாகுதன்னை

கத்தியெடுத்திடுவாள் கடிகச்சுழற்றிடுவாள்
பாலாசுழற்றிடுவாள் பந்துபோலவிட்டெறிவாள்
ஆகாசம்போனகத்தி அடியில்விழவொட்டாமல்
கீழேவிழவொட்டாமல் கிளிமொழியாளேந்தி நிற்க
தரையில்விழவொட்டாமல் தையலருமேந்திநிற்பாள்
சக்கரம்போல்சுழற்றிடுவாள் தனிலாகுபோட்டிடுவாள்
பம்பரம்போற்சுழற்றிடுவாள் பார்மேல்சுழன்றிடுவாள்
சற்குணதனஞ்சயா சம்பத்துபெற்றவரே
சுவாமிபாரக்கென்று போடுவாளாகுதன்னே

வேறு.

காண்டாவனமெரித்த காளையருச்சுனர்க்கு
அவளாடியகூத்தும் அதிசயப்பாவனையும்
பொருத்தால்பொருக்கவில்லை புகழ்வேந்தரர்ச்சுனர்க்கு
தணித்தால்தணியவில்லை தார்வேந்தருச்சுனர்க்கு
அதிசயமாக அர்ச்சுனருமேதுசொல்வார்
அண்டமளந்தாரும் ஆடவந்தாரென்கொலுவில்
ஆலவாய்சொக்கரும் ஆடிவந்தாரென்கொலுவில்
சேரனேசோழனே தென்பாண்டிநாட்டானே
கற்பேந்திரனே கலிங்கத்துராசாவே
விற்பேந்திரனே விராடபுரத்தரசே
ஆமென்றுநானறிந்து அடிவணங்கித்தெண்டனிட
துரோபதையைகேட்போமென்று திடுக்கிட்டெழுந்தி
ருந்து, அடி-பாவைதுரோபதையே பாஞ்சாலன்சீர்மக
ளே, அவளுடையகூத்தும் அதிசயப்பாவனையும் [தையே
பொருத்தால்பொருக்கவில்லை புனற்கிளியாள்துரோப
அண்டமளந்தாரும் ஆடிவந்தாரென்கொலுவில்
ஆலவாய்ச்சொக்கரும் ஆடிவந்தாரென்கொலுவில்
சேரனேசோழனே தென்பாண்டிநாட்டானே
கற்பேந்திரனே கலிங்கத்துராஜாவோ
விற்பேந்திரனே விராடபுரத்தரசோ
ஆமென்றுநானறியேன் அடிவணங்கித்தெண்டனிட
சொல்லுந்துரோபதையே தோற்றவில்லையெந்தனுக்கு
தோருவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
அந்தப்புலவன்றன்வாயாலே பொல்லாங்குமாகாது
வித்வான்தன்வாயாலே விஷவாக்குமாகாது
கூத்தாடிவாயாலே குறைவார்த்தையாகாது
காண்டாவனமெரித்த காளையவர்கேட்டு

அவனென்னகுறைச்சலென்று வந்தாண்டியிப்பவவன்
அவனுக்குதுள் ஏதுரத்னங்கள் துலங்குதுமரகதங்கள்
கைத்தலங்கள் ரண்டுங் கனைத்தநோர்மாணிக்கம் [யே
அவனென்னகுறைச்சலென்று வந்தாண்டியேந்திழை
கோபித்துவீற்றிருந்தார் கொம்பேபருச்சுனரும்.
தோழுவடிவழகி துரோபதையாளேதுசொல்வாள்
உன்முத்தானவாய்திறந்து உத்தரஞ்சொன்னாலே
எனக்குதோன்றினமட்டுந்தான் சொல்வேன்காணுனழ
ஆடுமயிற்சாய லருச்சுனருந்தான்கேட்டு [கா
தோழுவடிவழகி துரோபதைநாயகமே
நட்டுமுட்டுசாலையிலே நாயகிமாரிரண்டுண்டோ
ஏதையாராஜாவே ஏற்காதவார்த்தைசொன்னீர்
உமக்குத்தெரியாதோ ஒருவார்த்தைசொன்னீர்
அடி-அச்சுதன்றங்கை யாரணங்குசுபத்திரையே
பாரளந்தான்றங்கையரே பாவைசுபத்திரையே
நட்டுமுட்டுசாலையிலே நாயகிமாரிரண்டுண்டோ
ஏதையாராஜாவே ஏற்காதவார்த்தைசொன்னீர்
உமக்குத்தெரியாதோ ஒவ்வாதவார்த்தைசொன்னீர்
நாகமடந்தை நறுநுதலாள்நாயகமே
மாணிக்கத்தாலே வளருகின்றமாதரசே
நட்டுமுட்டுசாலையிலே நாயகிமாரிரண்டுண்டோ
ஏதையாராஜாவே எற்காதவார்த்தைசொன்னீர்
உமக்குத்தெரியாதோ ஒவ்வாதவார்த்தைசொன்னீர்
பொற்கலசநன்முலையாள் பேரகவதிநாயகமே
நட்டுமுட்டுசாலையிலே நல்லபெண்களிரண்டுண்டோ
ஏதையாராஜாவே ஏற்காதவார்த்தைசொன்னீர்
உமக்குத்தெரியாதோ ஒவ்வாதவார்த்தைசொன்னீர்
வண்டார்குழலாளே வயிரவள்ளிநாயகமே
நட்டுமுட்டுசாலையிலே நல்லபெண்களிரண்டுண்டோ
ஏதையாராஜாவே ஏற்காதவார்த்தைசொன்னீர்
உத்தமனார்வீரியரே ஒவ்வாதபேச்சுவைத்தீர்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள்நாயகமே
சோற்றுல்மடையடைக்குஞ் சோழன்றிருமகளே
நட்டுமுட்டுசாலையிலே நாயகிமாரிரண்டுண்டோ
ஏதையாராஜாவே ஏற்காதவார்த்தைசொன்னீர்
உமக்குத்தெரியாதோ ஒவ்வாதவார்த்தைசொன்னீர்

7

பங்கயத்திர்கண்ணாள் பவளக்கொடிநாயகமே
நட்டுமுட்டுசாலையிலே நல்லபெண்களிரண்டுண்டோ
ஏதையாராலாவே ஏற்காதவார்த்தைசொன்னீர்
உமக்குத்தெரியாதோ ஒவ்வாதவார்த்தைசொல்னீர்
வேதியர்சிர்மகளே வேல்பொருதுங்கண்ணாளே
ஆரியனார்பெற்றெடுத்த அழகுள்ளரத்தினமே
நட்டுமுட்டுசாலையிலே நாயகிமாரிரண்டுண்டோ
ஏதையாராலாவே ஏற்காதவார்த்தைசொன்னீர்
உத்தமனார்புத்திரரே ஒவ்வாதபேச்சுரைத்திர்
இப்படியாய்ச்சொல்லி யிருக்கின்றவேளையிலே

அருச்சுனன் அல்லிக்குத் தியாகங்கொடுத்தது.

விளங்கியசிர்மாதவத்து மின்னொளியாள் நாயகமே
உங்கள்-லையாகொடுத்தகொரு அழகானபட்டுவர்க்கம்
பட்டையங்கேகொண்டுவர பாவையிளங்கொடியே
ஆடும்புலவனுக்கு அப்பட்டோநான்கொடுப்பேன்
பாடும்புலவனுக்குப் பட்டெடுத்துநான்கொடுப்பேன்
என்றுமவருரைக்க ஏதுசொல்வாள்மின்னொளியும்
எங்கள்லையமார்தான்கொடுத்த அழகானபட்டாச்சே
மன்னவர்கள்தான்கொடுத்த மாதளம்பூப்பட்டாச்சே
அடும்புலவனுக்கு அப்பட்டோநான்கொடுப்பேன்
கொடுக்கவேமாட்டேனென்றாள்கொம்பேரிடையாளும்
காண்டாவனமெரித்த காளையதுகேட்டு
அந்தோடுபோனாலே யடியேன்பிழைத்திடுவேன்
பட்டோடேபோனாலே பார்த்தன்பிழைத்திடுவேன்
என்றுமவருரைத்து எழுந்திருந்தார்சிக்கிரமாய்
பட்டெடுத்துக்கைப்பிடித்துப் பார்த்தர்பெருமாளும்
ஆடும்புலவனன்னை யருச்சுனரும்வந்துநின்று
ஆடும்புலவனுக்கு அடிக்காய்க்கடுக்கனிட்டு
முரட்டுப்புலவனுக்கு மோதிரங்கள்தானுமிட்டு
அஸ்தகடகமிட்டு அரைஞாண்கயறுமிட்டு
இடைக்கிசைந்ததங்கம் எடுத்தொருதட்டிலிட்டு
பட்டொருதட்டில் பணதியொருதட்டிலேயும்
முத்தொருதட்டிலே மூன்றுதட்டாகவைத்து
மூன்றுநட்டுஜோடித்தார் முடிபுனைந்தயல்லியற்கு

பாங்கியர்கள் தட்டெடுக்கத் பார்த்திபன் முன்னடக்க
தாதியர்கள் தட்டெடுக்கத் தார்வேந்தன் பின்னடக்க
அரிவையர்கள் தட்டெடுக்க யருச்சுனனார் பின்னடந்து
பிறவாமுடி தரித்த பெண்பெருமாள் முன்னேவந்து
அல்லிக்கெதிரில் வந்து வருச்சுனனரேது சொல்வார்
பாடிவரும் வித்வானுக்குப் பார்த்திபரேது சொல்வார்
ஆடிவரும் வித்வானுக்கு வருச்சுனனரேது சொல்வார்
இந்தவெகுமானம் வந்ததென்றெண்ணுதே
குறைந்தவெகுமானங் கொடுத்தேனென்றுபாராதே
வாழ்மதுரையல்லியரும் வருவாளவை கூணத்தில்
தென்மதுரையல்லியரும் கூணத்திலே தான் வருவாள்
வளநாடியல்லியரும் வந்தாளேயாமாகுல்
யானையுந்தந்திடுவாள் ஆநந்தவாழ்மார்பி
குதிரையுந்தந்திடுவாள் கொற்றம்பூநாயகியும் [ல்லியவள்
நீர்கேட்டதெல்லாந்தான் கொடுப்பாள் கிளிமொழியாள
நினைத்ததெல்லாந்தான் தருவாள் நீலக்கருங்குழலாள்
என்றுதாமமுடியாளைத் தாம்வருந்திவேண்டுவதும்
ஓடமலர்க்கண்ணுளும் ஒற்றியொற்றிப்போகுவதும்
இப்படியாக இவர்களிருக்கையிலே
ஏழாநிலையும் எழுநிலையின் மேலிருக்கும்
அருச்சுனனர் தேவியரிலத்தண்டபெண்களிலே
விளங்கியசிர்மாதவத்து மின்னெளியாள் நாயகியும்
தோருவடிவழகித் துரோபதையைத்தான் பார்த்து
ஆச்சிதாமமுடியாளைத் தான்பிடித்துவேண்டுறதும்
கன்னியிளங்கொடியின் கையைமிகக்கொட்டுறதும்
ஓடமலர்க்கண்ணுளும் ஒற்றியொற்றிப்போகிறதும்
அதிசயத்தைப்பாருமென்று அனைவருமே தான்பேசி
மெத்தையைத்தட்டி விழுந்துநகைத்தார்கள்
கைகொட்டித்தானகைத்தார் கன்னியிளங்கொடிமார்
காண்டாவனமெரித்த காளையவர் பார்த்து
பெண்கள் நகைத்ததைப் போர்விஜயன் தான் பார்த்து
என்னுதுமெண்ணினுன் எண்ணமற்றசிந்தையிலே
நினையாதுந்நானினைந்து நித்திலங்கும்பூமுடியான்
புலவனை நாம்வேண்டினுல் பெண்களெல்லாமே நகைத்
வித்வானைவேண்டினுல் மெல்லியர்களே நகைத்தார் [தார்
இந்தமாயப்புலவன்மேல் மயலானுள் மங்கையவள்

கானப்புலவன்மேல் கடுக்கையலானுர்கள்
என்றுவேந்தரூர்சுனமும்விசனமாய்த்தானிருந்தார்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளல்லியரும்
மூன்றுதட்டும்தட்டிவிட்டாள் முடிகுழலாளல்லியரும்
தட்டையவள்தட்டிவிட்டாள் தையலருமேதுசொல்வா
ஆடும்புலவருக்கு அல்லிவரக்காரியமேன் [ள்
பாடும்புலவருக்குப் பாவைவரக்காரியமேன்
பெண்டுகள்பந்தியிலே போகார்புலவர்கள்தான்
வாழ்வரசிபந்தியிலே வாராபுலவரவர்
உமக்குபணந்தானரிதானல் பார்த்திபா நான்தாரேன்
வஸ்திரமரிதானல் வாள்விஜயா நான்தாரேன்
முத்துவரிதானல் முடிமன்னா நான்தாரேன்
ஆனையுஞ்சேனையும் ஆளழகாவுன்னுடைய
புண்ணியத்தாலுந்தனிட பூங்காவில்விட்டுவந்தேன்

முடுகு.

மேலோகம்போயிருந்தேனிரண்டுமெல்லியரைக்கொண்டுவந்தேன், கீழ்லோகம்போயிருந்தேனிரண்டுகிளிமொழியைக்கொண்டுவந்தேன், பரலோகம்போயிரண்டு பைங்கிளியைக்கொண்டுவந்தேன், பாருமையாசுவாமியென்றுபார்த்துமுன்னேதள்ளுவாளாம்

வேறு.

சின்னசின்னபெண்களா வாங்களடி
எங்கள்தேர்விஜயன்மேலே சிந்துபாடுங்கடி
அஞ்சலஞ்சலென்று கரணம்போடுங்கடி
அரிராமன்மைத்துனன் மேற்பாடுங்கடி
பார்த்தரவர்மேலே புகழ்பாடுங்கடி
பாவையரேயனுப்பிடுவார் கோறுங்கடி
பார்த்தருடமேலே புகழ்பாடுங்கடி
பார்த்தருடபெண்டுகளைக் கூட்டித்தரவும்
பட்டமும்மகுட குண்டலமும்
பாண்டவரெனுமொரு பாவனையும்
வந்தவர்க்கும்போனவர்க்கு மன்னமிடுவார்
காந்தாரிமைந்தருக்குக் கலங்காராம்
கன்னியர்மேலாசையது விலங்காராம்

மறந்தொருக்கால்பொய் யுரையாராம்
மனமில்லாக்காரியத்தைத் தொடராரும்
சிங்காதனமிருந்து செங்கோற்செலுத்தும்
தியாகாபோகா யோகாவென்று
திங்கள்மும்மாரி பெய்திடவேன்றும்
சிலைவிஜயனைவாழ்த்திக் கொண்டாடி
மண்டிபோட்டு உட்கார்ந்தாள்
மகுடமுடிதரித்த அல்லியரும்
ஆழிகொடுத்தனுமாரைத் தூதனுப்பி

வே று.

சீதைசிறைமீட்டுவந்த திருமாலுக்குமைத்துனரே
தேவரீர்பராக்கென்று போடுவாளாகுதன்னை
கிரியுஞ்சர்ப்பமுமோர் கூண்டிலடையும்
கெருடனும்பாம்புமது கிட்டிவிளையாடும்
மானுங்கலையு மொருதுறையில் நீர்குடிக்கும்
மண்டலத்திலேபுலியும் பசுவும்விளையாடும்
இராஜாதிராஜனே இராஜகெம்பீரனே
தேவாதிதேவனே தேவகெம்பீரனே
சற்குணயீஸ்வரா சகலகுணதனஞ்செயா
சுவாமிபராக்கென்று போடுவாளாகுதன்னை

வே று.

ஆணழகுமன்னன் னருச்சுனவீரியனும்
காண்டாவனமெரித்த காளையருச்சுனனும்
காளையருச்சுனருங் களைபட்டுச்சோர்ந்துவிட்டார்
அப்போஏழா நிலையி லிருக்கின்றபெண்களிலே
தோருவடிவழகி துரோபதையுந்தான்பயந்து
அனலிற்பிறந்தவளும் அல்லியர்க்கேதுசொல்வாள்
அமையுமமையுமம்மா ஆரணங்கேயாடினது
போதுமமையுமம்மா பொற்கொடியேயாடினது
உக்சக்கரவித்தைகளும் தையலரேபோதுமம்மா
கரணங்கள்போட்டதுவும் கன்னியரே நீ நிறுத்து
பஞ்சவர்கள்கேட்டாலே பகைவருமேயுன்புதுமை
பாரளந்தார்தாமறிந்தால் பகைவருமேநம்மளுக்கு
வீமனறிந்தாக்காக்கால் வெகுமோசம்வந்துவிடும்

குந்தியறிந்தாலே கோபமெத்தவுண்டாகும்
மாமியறிந்தாலே மகாமோசம்வந்துவிடும்
அமையுமமையுமென்று ஆரணங்கையமர்த்தி
கூத்தையடக்குமென்று கொம்பனையைக்கையமர்த்தி
ஏழாநிலையும் ஏழுநிலையும்விட்டிறங்கி
அருச்சுனன்றேவியர்களனைவருமோடிவந்து
பாஞ்சாலனெக்கியத்தில் வந்தபதிவிரதை
தானத்தருந்ததியாள் மாசிலாப்பத்தினியும்
மின்னற்கொடிபோலே மெல்லியருமுன்னேவந்து
காண்டாவனமெரித்த காளையரைத்தான்றாக்கி
காளையருச்சுனரை வாரிமடியில்வைத்து
கவரிபரிமாறுங் கன்னிகளைத்தானழைத்து
விசுங்கவரியென்றாள் மெல்லியிளங்கொடியாள்
தாமக்கருங்குழல்மார் தாதியர்கள்தான்கேட்டு
இன்றுமுறையென்னுதென்றெழுந்திருந்துசீக்கிரமாய்
சாதிமாணிக்கவரி சந்தனத்திலூட்டிவைத்து
கோலமணிக்கவரி குங்குமத்திலூட்டிவைத்து
வீசினார்பொற்கவரி மெல்லியிருபுறமும்
கவரிபரிமாறுகையில் கட்டழகியேதுசொல்வாள்
காளையருச்சுனர்க்குக் கன்னியெடுத்துரைப்பாள்
என்காணும்வாள்விஜயா இந்தமதியுந்தனுக்கு
தீர்த்தக்கடலாடி தேசமெல்லாந்தான்திரிந்து
வார்த்தைக்கடலாடி வையகமெல்லாந்தான்திரிந்து
மாதர்மனதறிய மாட்டீரோவாள்விஜயா
தேவிகுணமறியத்தெளிவற்றுப்போனீரோ
உத்தனுக்குத்தேவியர்காண் உவந்தெனக்குதங்கையவள்
மகுடமுடியல்லியரும் மாதெனக்குத்தங்கையல்லோ
அச்சொல்லைக்கேட்டுமுன்னே ஆவியுடனேவந்து
கட்டார்குழலிசொல்லத் திட்டென்றெழுந்திருந்து
காளையருச்சுனரும் கதித்தாபோலேதுசொல்வார்
ஆகுடிப்பாபெண்டுகளே அனைத்துமறைத்தீர்களே
ஓதுடிப்பாபெண்டுகளே ஒன்றார்மறைந்தீர்களே
என்றுகாண்டாவனமெரித்த காளையதிசயித்து
அல்லியரைப்பார்த்து அருச்சுனருமேதுசொல்வார்
என்குலமேகுலவிளக்கே குலவிளக்கவந்தவளே
பெண்களுக்குப்பெண்ணரசேபெண்பெருமாள்வாருமெ

ன்ருர், அடி-உன்கட்டுங்குலேயாமல் கன்னியரேயாடுமெ
ன்ருர், மெட்டுங்குலேயாமல் மெல்லியரேபாடுமென்ருர்
வேஷங்குலேயாமல் வெல்பொருதுங்கண்ணுளே
பாசத்துடனேவந்து பத்தினியேஆடுமென்ருர்
பிறவாமுடி-தரித்த பெண்பெருமாள்தான்கேட்டு
கன்னியுளமகிழ்ந்து கடுகெனவேஆட-லுற்ருன்

மூடுகு.

இராஜாதிராஜனே இராஜகெம்பீரனே
தேவாதிதேவனே தேவகெம்பீரனே
இடைச்சிமணவாளா எங்களுக்குந்தோழா
மகாராஜராஜனே மண்டலவுத்தாரனே
சற்குணதனஞ்செயா சகலகுணயீஸ்வரா
சுவாமிபராக்கென்று போடுவாளாகுதன்னே

வேறு.

காண்டாவனமெரித்த காளேயருச்சுனர்க்கும்
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளேதுசொல்வாள்
நான்ஆடியகூத்தும் அதிசயப்பாவனேக்கும்
பாடியகூத்தும் பணிந்துவந்தபாவனேக்கும்
இம்மட்டோவெகுமானம் எனக்குகொடுப்பது நீ
கலியாணவாசலிலே கரிச்சட்டிபிடிக்குந்துணி
போரஞ்சாமன்னனுக்குப் புட்டந்துடைக்குந்துணி
முத்துங்குழலிகட்கு முன்னுடைகட்டுந்துணி
வாளாளெடுப்பாளாம் மாய்ச்சிடுவாளேய்ச்சிடுவாள்
பந்தாகச்சுற்றியல்லோ பார்த்தன்முன்விட்டெறிவாள்
தோருவடிவழகி துரோபதையுமேதுசொல்வாள்
மதுரைநகராண்ட வாழ்பாண்டிநாட்டாளே
எல்லேயரசாண்ட யினியமொழியாலே
எந்தனுக்குத்தங்கையரே என்வார்த்தைநீர்கேளும்
உடற்பிறந்ததங்கையரே யொருவார்த்தைநீர்கேளும்
கொம்பேரருச்சுனர்மேல் கூத்துகட்டியாடினதும்
வம்பாருச்சுனர்மேல் விகடகவிபாடினதும்
பார்த்தரருச்சுனர்மேல் பாலாசுழற்றினதும்
காளேயருச்சுனர்மேல் கத்திசுழற்றினதும்
செந்துகள்பாய்ந்ததுவுங் கெர்ச்சித்துநின்றதுவும்

லாருகள்போட்டதுவும் லாடகவிபாடினதும்
பார்த்தருச்சுனனுர் பரிசுகொடுத்ததுவும்
தாமந்தவாழ்மாபன் தியாகங்கொடுத்ததுவும்
வாங்கேனென் தியாகமென்று வழக்காடிநின்றதுவும்
பரிசுபெறேனென்று பாடிநீ நின்றதுவும்
தாமமுடியானுந் தக்கபடிவேண்டினதும்
காளையருச்சுனனுர் கைப்பிடித்துவேண்டினதும்
நீ-ஓடமலர்க்கணனுளும் ஒற்றியொற்றிப்போனதுவும்
ஆத்தளேயுங்கண்டோங்காண் ஆனந்தவாழ்மார்பர்
நீவப்பாருச்சுனனுர் வாழ்த்தினதுகாண்கிலேயே
போர்விஜயராஜாவை புகட்டினதைப்பார்க்கிலேயே
கூத்தாடிபரிசுபெற்ருல் குளிரவேவாழ்த்தவேணும்
கவிபாடிபரிசுபெற்ருல் காளேயைவாழ்த்தவேணும்
வாழ்வரசிவாயாலே வாழ்த்துங்காண்தங்கையரே
பொற்கொடியாள்வாயாலே புகழுங்காணருச்சுனரை
என்றுதோழுவடிவழகி துரோபதையுந்தானுரைக்க
ஆகட்டும்ஆச்சியரே அப்படிக்கேநல்லதென்று [ற்ருள்
போர்விஜயனருச்சுனரைப் பெண்பெருமாள்வாழ்த்தலு

முநிகு-வேறு.

| | |
|---|---|
| தொப்பைக்கணபதியே அருச்சுனரே | ஐயா |
| தொல்லுலகில்வாழ்ந்திடுவீ ரெழில்விஜயர் | மெய்யா |
| அத்திப்புரந்தனிலே யருச்சுனருமையா | மையா |
| அழகாகவாழ்ந்திடுவ ரெழில்விஜயர் | மெய்யா |
| தேசம்பதினறுந் திரிந்துவந்தா | ரையா |
| திகட்டாதபட்டெனக்குச் கொண்டுவந்தார் | மெய்யா |
| வையகங்களெல்லாம் வளையவந்தா | ரையா |
| வளமானபட்டெனக்குச் கொண்டுவந்தார் | மெய்யா |
| கைலாசம்போயிருந்த கர்த்தரிவ | ரையா |
| கட்டாங்கிபட்டெனக்குக் கொண்டுவந்தார் | மெய்யா |
| வைகுந்தம்போயிருந்த வாசரிவ | ரையா |
| வளமானபட்டெனக்குக் கொண்டுவந்தார் | மெய்யா |
| பிரமபதிபோயிருந்த புருஷரிவ | ரையா |
| புதுமையுள்ளபட்டெனக்குக் கொண்டுவந்தார் | மெய்யா |
| தெய்வபதிபோயிருந்த தீரரிவ | ரையா |
| திரமானபட்டெனக்குக் கொண்டுவந்தார் | மெய்யா |

ஏமன்பதிபோயிருந்த ஈசரிவ ரையா
எனக்கிசைசந்தபட்டெடுத்துக் கொண்டுவந்தார் மெய்யா
பட்டெடுத்துத்தான்கொடுத்த பார்த்திப ரையா
பார்மீதிலெந்நாளும் வாழ்ந்திடுவர் மெய்யா
முத்தெடுத்துத்தான்கொடுத்த எழில்விஜய ரையா
முடிபுனைந்தெந்நாளும் வாழ்ந்திடுவர் மெய்யா
பகைத்துவருவோரை யருச்சுன ரையா
பந்தாட்டமாடிடுவ ரெழில்விஜயர் மெய்யா
சினைத்துவருவோரை யருச்சுன ரையா
செண்டாட்டமாடிடுவர் தேர்விஜயர் மெய்யா
பகைத்தவரைச்சங்கரித்துப் பார்த்திப ரையா
பட்டங்கட்டியரசாண்டு வாழ்ந்திடுவர் மெய்யா
எதிர்த்தவரைச்சங்கரித்து எழில்விஜய ரையா
எல்லையரசாண்டிடுவிர் தேர்விஜயர் மெய்யா
பங்காளிபூமுடியை வாழ்விஜய ரையா
பனங்காய்போல்தள்ளிடுவீர் தேர்விஜயர் மெய்யா
தாயாதிபூமுடியைத் தார்விஜய ரையா
தரணிதனில்தள்ளிடுவீர் தேர்விஜயர் மெய்யா
பத்தினிகள்புத்திரர்கள் பார்த்திப ரையா
பதறுமலெந்நாளும் வாழ்ந்திடுவீர் மெய்யா
குடும்பங்கிளைதழைத்துப் பார்த்திப ரையா
கோடிநாள்வாழ்ந்திடுவீர் குந்திமைந்தா மெய்யா
கொடுத்தாற்குறைவில்லை பார்த்திப ரையா
குறைவொன்றும்வருவதில்லை குந்திமைந்தர் மெய்யா
தந்தாற்குறைவில்லை தனஞ்செய ரையா
தாழ்வொருநாள்வருவதில் தார்விஜயர் மெய்யா
(எனக்கு)இட்டார்கிளைதழைத்து எயில்விஜர் நீயும்
எந்நாளும்பூமியிலே வாழிவாழி வாழி

வேறு.

தேனின்குழலாளுந் திரைக்குள்ளேபோய்புகுந்து
கட்டுகுலைத்தாளே காரிழையாளல்லியாரும்
வேஷங்குலைத்தாளே வேல்பொருதுங்கண்ணாளும்

அல்லி-ஈஸ்வரியைப் பெண்முகங்கேட்டது.

அப்போதுஅல்லியும் ஆணைங்கேதுசேய்தாள்
காளைசபையைவிட்டுக் கடுகெனவேதானெழுந்து

விஜன்சபையைவிட்டு வேல்பொருதங்கண்ணாளும்
ஏழாநிலையும் எழுநிலையின்மேலேறி
மேலரங்கதவை விடுகதவைத்தாள்திறந்து
பலகணிவாசல் திறந்தந்தப்பத்தினியும்
அந்தவழியாக அல்லியரும்போய்நடந்து
அங்கயற்கணம்மை அவள்வாழுங்கோயிலுள்ளே
வந்துவொருபுறமாய் மாதுவணங்கிநின்று
தாயேமலைமகளே சங்கரியேவல்லவியே
ஆயிவுமையவளே அங்கயற்கண்மாதவே
மாதாவேதாயேயுன் மலரடியின்றருள்போற்றி
சொக்கர்க்கினியவளே துய்யபதம்போற்றி
அல்லியிலைமேலே பிறப்பித்த ஆச்சியரே
மதுரைநகராளே மகளைநீயுண்டுபண்ணாய்
(என்னை) உண்டுபண்ணாஈஸ்பரியேயுன்றன்பதம்போற்றி
புலவன்முகமாற்றிப் பெண்ரூபந்தாருமம்மா
காளைமுகமாற்றிக் கன்னிமுகந்தாருமம்மா
புருஷர்முகமாற்றிப் பெண்முகந்தாருமம்மா [டாள்
முகமாற்றவேண்டுமென்று முடிவணங்கித்தெண்டனிட்

ஈஸ்பரி அல்லிக்குப் பெண்முகந்தந்தது.

அப்போதுசொக்கலிங்கம் அம்மனுமனமகிழ்ந்து
அங்கயற்கணம்மை யகிலாண்சதான்பார்த்து
அல்லியவள்கேட்பதற்கு அம்மன்மனமகிழ்ந்து
சொக்கர்முகம்பார்த்துச் சொல்வாளொருவார்த்தை
புருஷர்முகத்துடனே போர்விஜயன்றன்கொலுவில்
வித்வான்போல்வேஷங்கொண்டு விகடகவிபாடி
புலவன்போல்வேஷங்கொண்டு பெண்ணிவளுங்கூத்தாடி
வேந்தருச்சுனரை வெட்கங்கெடுத்துவந்தாள்
பார்த்தருச்சுனரைப் பங்கப்படுத்திவந்தாள்
(அப்போ) கும்பிட்டெழுதினதால் கூத்துகட்டியாடினாள்
வணங்கியெழுதினதால் விகடகவிபாடினாள்
அருச்சுனன்றன்சபையி லாடிவரும்போது
வெகுமானங்கொண்டுவந்தார் வேந்தருச்சுனரும்
அவர்தந்தவெகுமானந் தார்குழலாள்வேண்டேனென்றாள்
இந்தவெகுமானம் எடுக்கேனென்றாளல்லியரும்
அப்போதருச்சுனரும் அனைவர்க்குமுன்பாக

(இவர்) கவிராயரென்று கனிவுடனேதெண்டனிட்டு
விகடகவிதெரிந்த வித்துவானிவரென்று
சங்கீதந்தெரிந்த சரசகவிராயரென்று
புலவரிவரென்று பொற்கொடியாள்கைபிடித்தார்
வித்துவானிவரென்று வேண்டிஞாதானுமப்போ
கும்பிட்டெழுதினதைக் குற்றமென்றுளல்லியரும்
இப்போதுவேண்டினர் எழில்விஜயராருச்சுனரும்
அக்குற்றந்தான்பொறுத்தா ளல்லியிவளென்றுசொல்லி
அப்போதுகிருபை அவள்மீதில்தானும்வந்து
தட்டிநகைத்தார்கள் சுவாமியும்அம்மனுமாய்
குலுங்கவேதானகைத்துக் கொம்பனையாளல்லியரும்
கமலமுகமாற்றிக் கன்னிமுகந்தான்கொடுத்தார்
புருஷர்முகமாற்றிப் பெண்முகந்தான்கொடுத்தார்
மன்னர்முகமாற்றி மாதுமுகம்பெற்றபின்பு
அல்லிமனமகிழ்ந்து அங்ஙனேயேதுசெய்தாள்
கண்ணாடிகைப்பிடித்துக் கட்டழகிபார்க்கலுமே
கண்ணாடிக்குள்ளாகக் கன்னிமுகந்தோன்றுகுது
பிறவாமுடிதரித்த பெண்பெருமாளுளமகிழ்ந்து
மாதரசிதானும் வணக்கத்துடனேயப்போ
அம்மனுடகோயில்விட்டு அல்லிப்பெருமாளும்
சந்நிதியைவிட்டுமல்லோ தையலிளங்கொடியாள்
எழுநிலையும் எழுநிலையும்விட்டிறங்கி
நீராடுஞ்சாலையிலே நித்திலங்கும்பூமுடியாள்
மஞ்சணீர்ச்சாலையிலே மாதுகன்னிபோய்ப்புகுந்து
ஆடைகளைந்துமவள் ஆபாணந்தாங்களைந்து
சாலுகளில்நிரப்பிவைத்த ஜவ்வாதுபன்னீரால்
மஞ்சணீராடி மயிர்முடிந்துமுன்போட்டு
குளித்துக்கரையேறிக் குழல்முடிந்துபின்போட்டு
கோடாலிமுடியும் கொப்பளவேதானுமிட்டு
ஈரமவிழ்த்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகிலகளைந்து நாகத்துளிர்பட்டுடுத்தி
சிவசிவாவென்று திருநீற்றுக்காப்புமிட்டு
அரகராவென்றுசொல்லி யணிந்தாளேவெண்ணீறு
வில்வமெடுத்து விநாயகரைப்பூசைசெய்து
மல்லிகைமலரெடுத்து மகாதேவனைப்பூசைசெயது
பாரிஜாதமலரெடுத்துப் பாமனைப்பூசைசெய்து

சுவாமியையும் அம்மனையும் சாஷ்டாங்கதெண்டனிட்டு
சம்பங்கிபூவெடுத்துச் சண்முகரைப்பூசைசெய்து
கஸ்தூரிமலரெடுத்துக் கார்வண்ணனைப்பூசைசெய்து
செந்தாமரைமலரெடுத்து ஸ்ரீதேவியைப்பூசைசெய்து
(வெண்) தாமரைமலரெடுத்துச் சரஸ்வதியைப்பூசைசெ
பத்திரம்போட்டுப் பகவானைப்பூசைசெய்து [ய்து
தும்பைமலரெடுத்துச் சூரியனைப்பூசைசெய்து
இந்திரரைக்கைதொழுது யாவரையுந்தெண்டனிட்டு
சொக்கரையும்அம்மனையும் தொழுதிரங்கித்தெண்டனிட்
சகலவிதஆராதனைச் சம்பிரமாய்த்தான்செய்து
அழகுண்ணுமண்டபத்தே யாரணங்குபோய்புகுந்து
போஜனமுண்டு பொடியிட்டுக்கைதிமிறி
தக்கோலந்தின்று தையலந்த அல்லியரும்
உண்டானபெண்களெல்லா மொருபக்கம்வீற்றிருந்தார்
(அப்போ)வாராரேஅருச்சுனரும் வடக்கெழுந்தசூரியன்போல்
(அவர்) ஒய்ந்தநடையுடனே உத்தமிமார்முனனேவந்து
பெண்டுகள்பந்தியிலே போர்விஜயன்வந்துநின்று
அல்லிமுகம்பார்த்து அருச்சுனருமேதுசொல்வார்
புலவனைப்போலவந்த பெண்டுகளோ நீங்களெல்லாம்
வித்வானைப்போலவந்த மெல்லிகளோ நீங்களெல்லாம்
கவிராயனைப்போலவந்த காரிகைமார் நீங்களோதான்
கன்றிற்றே கன்றிற்றே காரிகைக்குக்கன்றிற்றே
கண்கள்ரெண்டும்பொல்லாதுகாரிகைக்குதிருஷ்டியென்று
பார்வைரெண்டும்பொல்லாதுபாவையர்க்குதிருஷ்டியென்
அல்லிப்பெருமாட்கு ஆலத்திசுற்றுமென்றார்
திருஷ்டிகழியுமென்றார் தேனின்குழலாட்கு
தாமக்கருங்குழலார் தாதியர்களோடிவந்து
இன்றுமுறையென்னுமென்று ஏலங்கருங்குழல்மார்
முத்தாலேஆலத்தி முகத்தின்முன்காட்டினார்கள்
பவளத்தாலாலத்தி பாவையர்க்குசுற்றினார்கள்
பஞ்சவர்ஆலத்தி பண்புடனேசுற்றினார்கள்
கற்பூரஆலத்தி கன்னியர்க்குசுற்றினார்கள்
சுண்ணாம்புமஞ்சளுஞ் சுற்றியெறிந்தார்கள்
செஞ்சோறும்வெண்சோறும் திருஷ்டிகழித்துவிட்டார்
இப்படியாக இருந்தார்கள்பெண்களெல்லாம்
அப்போதுமின்னொளியாள் ஆரணங்குநாயகிக்கு

உ

கணபதி துணை.

# மின்னொளியாளுக்கு

ஸ்ரீமந்தஙலியாணஞ் செய்தது.

சீமையிலுள்ள ராஜருக்கு ஸ்ரீமந்தமென்றுசொல்லி
வேவுகரைத்தானழைத்து விரைவுடனேசுருளோலை
கொண்டுபோய்தெரிவித்து கொப்பனவேவாருமென்முர்
அதுசேதிதான்கேட்டு அனைவரும்வந்தமர்ந்தார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
யேகம்பயின்றெடுத்த விளங்கியசீர்மாதவத்தாள்
விளங்கியசீர்மாதவத்து மின்னொளியாள் நாயகிக்கு
தாதியர்களோடிவந்து தையலிளங்கொடிக்கு
மஞ்சணீராட்டினர் மாதுகருங்குழற்கு
நலங்குமுதலானதும் நலபூடனே செய்துவைத்து
ஸ்தானங்கள்செய்துவைத்தார் தார்குழலாள்மின்னொளிக்கு
உயர்ந்தநல்லபட்டுடுத்தி உத்தமிக்குச்சோடித்தபின்
சம்பங்கியெண்ணெய்கொண்டு தடவிமயிராற்றி
வாரிச்சிணுக்கறுத்து வான்சவரியுட்சொருகி
சீவிச்சிணுக்கறுத்துச் சிமிள்போலக்கொண்டையிட்டு
ஒவ்வொருமயிருக் கொவ்வொருபொன்னிதழாம்
பூவிதழும்பொன்னிதழும் பூட்டியலங்கரித்தார்
கட்டிமுடித்தகொண்டை காதின்கீழ்சோதிமின்ன
சுற்றிமுடித்தகொண்டை சூரியனைத்தோற்கடிக்கும்
ஆண்மயிலைபெண்மயிலை அண்டையிலேசேர்த்தார்கள்
சந்திரனைச்சூரியனை சரியாய்ப்பிறையணிந்து
பக்கத்திற்கோர்த்தார்கள் பல்லியாழ்வார்பிறையும்
பல்லீடுமேலீடு பக்கமயிர்கொலுசும
அருகுகொப்புசொருகுவாளி அன்னகொப்புமணிந்தாள்
பச்சைக்கல்முருகுகளும் பதித்தார்கள்மெல்லியர்க்கு
மூக்குத்தியட்டிகை மேற்காதில்பாலையும்
நாகாக்காரையது நடுக்கழுத்திற்பூஷணமாம்
ஒற்றைச்சரடுகளாம் ஒருபுரமாம்பொற்சரிகை
இரட்டைச்சரடுகளாம் இருபுறமும்பொற்சரிகை

மூத்துவடங்களாம் மோகனமாலைகளாம்
வட்டச்சரப்பளியாம் மார்நிறைந்ததாழ்வடமாம்
ஐந்துவிரலுக்கு மழுத்தியோதிரமாம்
பத்துவிரலுக்கும் பதித்தகணையாழிகளாம்
பாடகந்தண்டைகளாம் பருஞ்சிலம்புகாலாழி
காலாழிகல்லணையாம் பிலாழிபில்லணையாம்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரம்பண்ணினார்கள்
வேணபணிதியெல்லாம் மெல்லியிளங்கொடிக்கு
பூட்டியலங்கரித்துப் புஷ்பமுடித்தார்கள்
மாலைமுதலானதும் மருங்குடனேபோட்டார்கள்
மாதரிளங்கொடிக்கு மையெழுதிபொட்டுமிட்டார்
ஸ்ரீமந்தமண்டபங்கள் சிறப்பாயலங்கரித்து
வெள்ளியால்கால்திறுத்தி வெற்றிலையாற்பந்தலிட்டு
முத்தாலேகால்திறுத்தி முழுவயிரப்பந்தலிட்டு
வாழைமரம்கமுகுமரம் வாசலெங்குந்நாட்டிவைத்தார்
தென்னமரம்வாழைமரம் தெருவெல்லாநட்டார்கள்
ஈச்சங்குலைபாக்குக்குலை எங்கெங்குங்கட்டினார்கள்
இளநீரும்தாமரைப்பூ யிசைவாகக்கட்டினார்கள்
வேதியர்கள்சாஸ்திரிகள் விதம்விதமாய்வந்தார்கள்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
இந்தக்கலியாணத்தில் என்னென்வாத்தியங்கள்
நகபத்துமேளம் நயமாகவடித்தார்கள்
நாகசுரமேளம் நலமுடனேவாசித்தார்
எக்காளம்பூரி யின்பமுட னூதினார்கள்
சூரியபிறைசந்திரபிறை துரிதமுடன்தானடித்தார்
டோல்முரசுமேளம் துலங்குதாம்மண்டபத்தில்
ஐந்துவிதமேளம் அழகாயடித்தார்கள்
எட்டுவிதமேளம் எடுத்து அடித்தார்கள்
பத்துவிதமேளம் பாங்காயடித்தார்கள்
சங்கீதமேளமது சபையில் முழங்கிவர
நவரசவாத்தியம் நலமுடனே வாசித்தார்
பதினெட்டுமேளம் பலவிதமாய்வாசித்தார்
அடிபடுதேபேரிகைதா னந்தகரந்தானதிர
இப்படியாக விருக்கின்றவேளையிலே
அந்தணருஞ்சாஸ்திரிகளும் அமர்ந்தார்கள்பந்தலிலே

தாமக்கருங்குழலர்ள் தாதியருமோடிவந்து [வாள்
அந்தணர்க்குத்தெண்டனிட்டு அருங்கிளியாளேதுசொள்
நாயகியைக்குந்தவைக்க நற்பொருத்தஞ்சொல்லுமென்று
வேதியரும்சாஸ்திரிகளும் வெகுவிதமாயாராய்ந்து
இதுநல்லவேளையென்று எடுத்துரைத்தார்வேதியரும்
தாதியர்கள்தான்கேட்டுத் தையலருமோடிவந்து
பொங்கலுமிட்டுப் படைத்தார்கள்தெய்வங்கட்கு
விளங்கியபிர்மாதவத்து மின்னொளியைக்குந்தவைத்து
மூதுகுநீர் சுத்திஞர் முத்துக்குழலாட்கு
ஸ்ரீமந்தஞ்செய்தார்கள் தேர்விஜயன்தேவியர்க்கு
மகுடமுடிராஜாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார் [ன்
அனைவரையும்நமஸ்கரித்து அரண்மனையினுட்புகுந்தா
பாலிகைப்பாய்மேலே பாங்குடனேவீற்றிருந்தார்
பாலும்பழமுண்டு பசியாறிவீற்றிருந்தாள்
அந்தமணப்பந்தலிலே யழகானதருமலிங்கம்
மொய்ப்பாக்கும்வெற்றிலையும் முடிமன்னராஜருக்கு
சந்தனபுஷ்பமும் தாம்புலம்வழங்கிஞரே
ஆரியர்பிராமணர்க்கும் அதிதிபரிதேசிகட்கும்
பலதானங்கொடுத்தார்கள் பிராமணருள்வாக்கும்
தானதர்மமுள்ளதெல்லாம் சரியாகவழங்கிஞர்கள்
பலதானம்வாங்கியே போய்விட்டார்பிராமணர்கள்
மண்டலத்துராஜாக்கள் வந்திருந்ததுரைகளெல்லாம்
போசனச்சாலையிலே போய்ப்புகுந்தாரெல்லவரும்
பந்திப்பாய்போட்டார்கள் பாங்குடனேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடனீர்தெளித்தார்
முப்பழமுஞ்சர்க்கரையும் முடிமன்னர்வைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்துப் போஜனமுண் ணுமென்ருர்
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகைமுன்னேவைத்தார்
மல்லிகைமொக்குபோலே மாற்றுவெள்ளிநிறம்போலே
போசனங்கள்பாலித்துப் பொரிக்கரியும்வைத்தார்கள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கரியு மியலானபோசனமும் [தார்
பொன்போல்பருப்பும்வைத்துப்புத்துருக்கு நெய்சொரிந்
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகைவைத்தார்கள்
இளந்தோய்ச்சல்தயிருமிட்டா ரெலுமிச்சங்காயுமிட்டார்

போஜனங்களுண்டபின்பு பொடியிட்டுக்கைதிமிறி
கைகாலலம்பிக் கனிவாயுங்கொப்பளித்து
சித்திரப்பந்தலிலே வந்தமர்ந்தார் துரைகளெல்லாம்
சம்பந்ததாம்பூலத் தட்டோடு வழங்கினார்கள்
உறவின்முறைதாம்பூல முத்தமர்கள்வழங்கினார்கள்
வந்திருந்தபேர்களுக்கு வழங்கினார் தாம்பூலம்
(அப்போ)வந்து நிறைந்தவொரு மன்னவர்களெல்லாரும்
தாம்பூலந்தின்று சகலருமவீற்றிருந்தார்
அத்தண்டபெண்களெல்லாம் அனைவருமுண்டபின்பு
தாம்பூலம்பெற்றுத் தையலர்களெல்லாரும்
அவரவர்கள்மன்னருடன் அனைவரும்போய்ச்சேர்ந்தார்
வாள்விஜயராச்சுனரும் மாதரிடந்தானிருந்தார்
இந்தக்கதைதன்னை யின்பமுடன்கேட்டவர்கள்
வித்வான்குறமதனை விருப்பமாய்படித்தவர்கள்
கற்றவருமகேட்டவரும் கருத்துடனேசொன்னவரும்
ஆதிசிவன்போல அவனிதனில்வாழ்வார்
மாயன்பெருமாள்போல் மண்டலத்தில்தான்வாழ்வார்
கற்பகத்தருவுபோல் கருத்துடனே வாழ்ந்திருப்பார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
மூங்கில்போல்சுற்றும் முசியாமல்வாழ்ந்திருப்பார்
ஊழிபூழிதோறும் உலகத்திலுள்ளவர்கள்
வாழிவாழியென்று வாழ்த்தளித்தார்ரீச்சுரனார்.

அல்லியரசாணி - வித்துவானுனகுறம்.

முற்றுப்பெற்றது.

---

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட் புல்டிங் போஸ்டு, மதராஸ்.